# உதயன்

விலை ரூபா 8.00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 19 புதன்கிழமை (05-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:342

www.uthayan.com


### ஜனாதிபதி நேற்று திடீர் அதிரடி நடவடிக்கைகள்!

# மூன்று அமைச்சர்கள் பதவி நீக்கம்!

# நாடாளுமன்றமும் ஒத்திவைப்பு!!



## பல அதிகாரிகள் புதிதாக நியமனம்

கொழும்பு,நவம்பர்5

**தேசிய அரசியலையே கலங்கடிக்கும் விதத்தில் அதிரடி நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முக்கிய மூன்று அமைச்சர்களை அவர்களின் அமைச்சுப் பொறுப்புகள் சிலவற்றிலிருந்து நீக்கி 'கல்தா' கொடுத்திருக்கிறார் ஜனாதிபதி. அந்த அமைச்சுக்களின் பொறுப்புக்களையும் ஜனாதிபதி தானே கையேற்றிருக்கிறார்.**

**நாளை கூடவிருந்த நாடாளுமன்றத்தையும் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இரண்டு வார காலத்துக்கு - எதிர்வரும் 19ஆம் திகதிக்கு - ஒத்திவைத்திருக்கிறார் ஜனாதிபதி.**

பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து திலக் மாரப்பனவும், உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து ஜோன் அமரதுங்கவும், மக்கள் தொடர்பாடல் அமைச்சர் பதவியிலிருந்து இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பாதுகாப்பு, மக்கள் தொடர்பாடல், ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்கள் இருவரும் பதவியிலிருந்து மாற்றப்பட்டிருக்கின்றார்கள். உள்துறை அமைச்சின் செயலாளரான எம்.என். ஜுனைட் அப்பதவியில் தொடர்ந்து இருந்து வருகிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



ஜோன் அமரதுங்க (உள்துறை)



திலக் மாரப்பன (பாதுகாப்பு)



இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் (மக்கள் தொடர்பாடல்)

## புலிகளுடன் பேசத் தயார் என ஜனாதிபதி அறிவிப்பு!

இனப்பிரச்சினைக்கு புலிகளுடன் பேசித் தீர்வுகாண நான் தயாராக இருக்கின்றேன் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்பு நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில மாதங்களாகக் குழப்பங்களை ஏற்படுத்தி வந்த விடயங்கள் கடந்த சில நாள்களாக மோசமடைந்த நிலையில், தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் பயனுள்ள நடவடிக்கைகளை நிர்வாகம் எடுக்கத்தவறியதால், இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ளுவதற்கு உறுதியானதும் நிலையானதுமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கருதினேன்.

அதனடிப்படையில் அவசர நேர்சீர் செய்யும் நடவடிக்கைகள் அவசியமானவை என நான் கருதியே அரசின் மூன்று துறைகளைக் கையேற்கத் தீர்மானித்தேன்.

அதன்படி நாட்டின் பாதுகாப்பு நிலையில் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தொடர்புகளைக் கொண்ட உள்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சு ஆகியவற்றையே

(16 ஆம் பக்கம் பார்க்க)

### சீன ட்றோலர்கள் கைப்பற்றப்பட்டன!

கிழக்குக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சீன ட்றோலர் படகுகள் இரண்டினை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு கைப்பற்றப்பட்ட இந்தப் படகுகளில் இருந்த மீனவர்களையும் கைதுசெய்து திருகோணமலை துறைமுகப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகக் கடற்படைத் தளபதி ஜெயந்த பெரேரா தெரிவித்தார். (ஒ-5)

## புலிகளின் பொறுப்பாளர்கள் வன்னிக்கு மீள அழைப்பு?

கிளிநொச்சி,நவ.5

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள திடீர் அரசியல் மாற்றங்களை அடுத்து வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் பணியாற்றச் சென்றிருந்த தமது முக்கிய தலைவர்களை விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வன்னித் தலைமையகத்துக்கு திருப்பி அழைத்திருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

- இவ்வாறு முக்கிய பொறுப்பாளர்கள் அழைக்கப்பட்டிருப்பது கலந்தாலோசனைகளுக்காகவோ அல்லது வேறு நோக்கங்களுக்காகவோ என்பதை அறிய முடியவில்லை.

அடுத்த மட்டத் தலைவர்கள் அடுத்து வரும் நாள்களில் வன்னிக்குத் திருப்பி அழைக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## கொழும்பின் முக்கிய இடங்களில் பொலீஸார் பாதுகாப்புக் கடமையில்!

கொழும்பு,நவ.5

பாதுகாப்பு, மக்கள் தொடர்பாடல், உள்துறை ஆகிய அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதை அடுத்து கொழும்பின் கேந்திர முக்கிய இடங்களில் பொலீஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அரசாங்க அச்சகம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீனத் தொலைகாட்சி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு பாதுகாப்பு வழங்குமாறு ஜனாதிபதி பொலீஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



அரச அச்சகத்தின் வாயிலில் பாதுகாப்புக் கடமையில் படையினர்...

### பிரதம நீதியரசருக்கு எதிரான

## குற்ற விசாரணைப் பிரேரணை சபாநாயகரிடம் நேற்று சமர்ப்பிப்பு

கொழும்பு,நவ.5

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணை நேற்று நண்பகல் 1.30 மணியளவில் அமைச்சர் கருஜயசூரியவினால் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் கையளிக்கப்பட்டது.

ஐதேகட்சியின் அமைச்சர்களான கரு ஜயசூரிய, மஹிந்த சமரசிங்க, லொக்கு பண்டார மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்பிரேரணை கையளிப்பில் கலந்துகொண்டனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிச் சேவைச் சங்கத்தினர் நாளை 'லீவில்' செல்ல முடிவு

கொழும்பு,நவ.5

நீதிச்சேவைச் சங்கம் நேற்று எடுத்த தீர்மானத்தின்படி நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் யாவரும் நாளை லீவில் செல்ல முடிவெடுத்துள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசு கொண்டுவந்துள்ள குற்றவிசாரணைப் பிரேரணையை எதிர்த்தே இந்தத் தீர்மானத்தை இவர்கள் எடுத்துள்ளனர்.

இது குறித்து நீதிச் சேவைச் சங்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நிலைமையைப் பிரதமர் ரணில் வாஷிங்ரனிலிருந்து நெறிப்படுத்தினார்

வாஷிங்ரன்,நவ.5

அமைச்சர்கள் மூவரின் பதவிகளுக்கு 'கல்தா' கொடுத்த செய்தி, அமெரிக்க நேரப்படி நேற்று நள்ளிரவு கடந்து அதிகாலை 2 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்பட்டது.

பிரதமர் - உடனடியாக - திலக் மாரப்பன, ஜோன் அமரதுங்க, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோருடன் தொடர்புகொண்டு பேசினார்.

பின்னர், வாஷிங்ரனில் அமைச்சர்கள் டிரோன் பெர்னாண்டோ, மிலிந்த மொறகொட, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேர்னாட் குணதிலக, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் சுபசிங்க ஆகியோருடன் பிரதமர் - தற்போது ஏற்பட்டுள்ள நிலைவரம் குறித்து - கலந்துரையாடினார்.

அந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களைக் கூட்டுவது என்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தனுக்கு சந்திரிகா அழைப்பு

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

தம்மை இன்று சந்திக்கும்படி ஜனாதிபதி விடுத்துள்ள இந்த அழைப்பில் கேட்கப்பட்டுள்ளது.

அதேசமயம், அலரிமாளிகையில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு பிரதமர் அலுவலகம் நேற்று மாலை தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, தமிழ்க்கூட்டமைப்பு

(16 ஆம் பக்கம் பார்க்க)

### இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# புலிகளின் வரைவு குறிப்பிடத்தக்கதொன்றுதான் ஆனால் சமஷ்டிக்கு வெளியில் சென்று விட்டது

## பிரதமர் ரணிலுடனான பேச்சை அடுத்து ஆர்மிரேஜ் கருத்து

வாஷிங்ரன்,நவ.5

விடுதலைப் புலிகள் முதல் தடவையாக தமது தீர்வு யோசனைகளை வெளியிட்டிருக்கின்றனர். இதனை முக்கியமானதாகக் கருதுகிறோம்.

எனினும், இந்த யோசனைகள் ஒஸ்லோவிலும் ரோக்கியோவிலும் பேசப்பட்ட சமஷ்டி வரையறைக்கு அப்பால் சென்று விட்டன போன்று தெரிகிறது. அந்த எல்லைக்குள் நாம் மீண்டும் வரவேண்டும்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் மேற்கண்டவாறு கூறினார்.

வாஷிங்ரனில் உள்ள றிட்ஜ் கால்டன் ஹோட்டலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் பேச்சுக்களை நடத்திய பின்னர் ஹோட்டலின் வரவேற்பு மண்டபத்தில் இந்த பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது.

ரிச்சர்ட் ஆர்மிரேஜுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பின் போது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான புலிகளின் வரைவு, இலங்கையின் அரசியல் நிலைமை உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.



இச்சந்திப்பில் அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, டிரோன் பெர்னாண்டோ, வெளியுறவுச் செயலர் பேர்னாட் குணத்திலக்க, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த சுபசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ரிச்சர்ட் ஆர்மிரேஜுடன் தெற்காசிய விவகாரங்களுக்கான செயலாளர் கிறிஸ்டினா ரொக்காவும் கலந்து கொண்டார்.

20 வருடகால யுத்தத்தினால் பேரழிவுகளைச் சந்தித்துள்ள இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு அமெரிக்கவும் அமெரிக்க மக்களும் அளித்து வரும் ஆதரவு குறித்து இந்த சந்திப்பின் போது ஆர்மிரேஜ் எடுத்துரைத்தார். இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்தும் இந்த சந்திப்பின் போது ஆராயப்பட்டன. (ஒ)

# பாதுகாப்பு ஒத்துழைப்பு கு[illegible]த்து பிரதமர் அமெரிக்காவில் பேச்சு

வாஷிங்ரன்,நவ.5

இலங்கையும் அமெரிக்காவும் பாதுகாப்பு விடயங்களில் ஒத்துழைப்புடன் செயற்படவுள்ளன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமெரிக்க பாதுகாப்பு உதவிச் செயலாளர் போல் வோல் பிட்ஸூம் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனில் நடத்திய பேச்சுக்களில் பாதுகாப்பு ஒத்துழைப்பு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்கனவே பாதுகாப்பு தொடர்பாக காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேலும் நெருங்கிச் செயற்படுவது குறித்து இச்சந்திப்பின் போது தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை படையினருக்குப் பயிற்சி வழங்குதல், தேவையான ஆயுதங்களைப் பெறுதல் ஆகியவை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இலங்கையின் பாதுகாப்புக்குத் தேவையான ஆயுதங்களை இந்தியாவிடமிருந்து பெறுவதற்கு மேலதிகமாக இந்தியாவிடமிருந்து பெற முடியாதவற்றை அமெரிக்காவிடமிருந்து பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையின் பாதுகாப்புத் தேவைகளுக்கு அமெரிக்காவிடம் இருந்து 15 லட்சம் டொலர் (பதினைந்து கோடி ரூபா) இந்த ஆண்டு முதன்முறையாக இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.

இலங்கைக்கு ஒரு துப்பாக்கி ரவை கூட விற்பனை செய்வதில்லை என்று அமெரிக்கா இரு வருடங்களுக்கு முன்பு எடுத்திருந்த தீர்மானத்துடன் ஒப்பிடும் போது இந்த உதவித்தொகை வழங்கப்படுவது ஒரு பெரிய மாற்றமாகும்.

### உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக்முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்றுமுதல் உரும்பிராய் இந்தக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

☆ பிற்பகல் 4 மணி - கலைவாணி வி.க. எதிர் புத்தூர் எவரெஸ்ற் வி.க.

☆ மாலை 5.15 மணி - நாவாந்துறை சென்மேரிஸ் வி.க. எதிர் சென் அன்ரனிஸ் வி.க. (ஒ-5)

### கூடைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.5

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய வி.கழகமும், யுத்கார்மல் வி.கழகமும் மோதவுள்ளன. (ஒ-5)

### நகர வீதியில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்துக்கு அண்மையாக இறந்து கிடந்ததாகத் தெரிவித்து, ஒருவரின் சடலம் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

திருநெல்வேலியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் சந்திரகுமார் (வயது-47) என்பவரின் சடலமே அது என இறந்தவரின் உறவினர் மூலம் தெரிய வந்துள்ளது.

மேற்படி நபர் இரத்த அழுத்தம், இருதய நோய் உள்ளவர் என்றும் - இதன் காரணமாகவே அவர் உயிர் இழந்திருக்கலாம் என்றும் - கருதப்படுகிறது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ். வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (ஒ-6-9-15)

# விடுதலைப் புலிகளின் வரைவு வரலாற்று முக்கியத்துவமானது

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு,நவ.5

ஐக்கிய இலங்கைக்குள் பிராந்திய அதிகாரசபை ஒன்றுக்கான வரைவை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ளமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் பெரும்பாலான பகுதியை உள்ளடக்கி விடுதலைப் புலிகள் சீரான ஆட்சியை நடத்தி வருகின்றனர்.

சிங்கள - தமிழ் மொழிகள் அரசகரும மொழிகளாக பிரகடனப்படுத்தப்பட்டபோதும், மாகாணசபை பற்றிய பிரேரணை முன்வைக்கப்பட்டபோதும் இனவாதிகள் நாடு பிளவுபடப் போவதாக எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

புலிகள் சமர்ப்பித்துள்ள வரைவு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அடித்தளமாகப் பயன்படும் என நான் திடமாக நம்புகின்றேன் என்றார் வாசுதேவ நாணயக்கார.

இதேவேளை, புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தின இது தொடர்பாக கருத்துத் கூறுகையில் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள வரைவு தமிழ் - சிங்கள மற்றும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துடனான கூட்டணி ஆட்சியை தெளிவாகக் கொண்டுள்ளது.



இனவாத சதிப் புரட்சிகள் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற எண்ணுபவர்கள் இந்த வரைவை எதிர்ப்பதில் ஆச்சரியம் இல்லை என்றார் அவர். (ஒ-5)

# சென். பற்றிக்ஸ் மாணவர் நேற்று இரத்ததானம்

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் நேற்று செவ்வாய்க் கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்த தானம் செய்தனர்.

இக்கல்லூரியின் 'இன்ரறக்ற்' கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததானம் இடம்பெற்றது.

நேற்று 36 பைந் இரத்தமும் கடந்த 2ஆம் திகதி 45பைந் இரத்தமுமாக மொத்தம் 81 பைந் இரத்தம் இக்கல்லூரி மாணவர்களால் யாழ். வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இரத்தவங்கியின் வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் கல்லூரிக்குச் சென்று இரத்தத்தினைச் சேகரித்தனர்.

சென்ற வருடம் இக் கல்லூரியின மாணவர்களால் 75 பைந் இரத்தம் தானம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-6-15)

# சுவிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நுணாவில் பாடசாலை புனரமைப்பு

## அடிக்கல் நடும் வைபவம் இன்று

யாழ்ப்பாணம்,நவ.5

சுவிஸ்ஸர்லாந்தின் உதவியுடன் பாடசாலைகளைப் புனரமைக்கும் திட்டத்தின் ஒரு செயற்பாடாக தென்மராட்சி நுணாவிலில் இன்று பாடசாலைப் புனரமைப்புக்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெறவிருக்கின்றது.

நுணாவில் மேற்கு தமிழ்க்கலவன பாடசாலையில் சேதமடைந்த வகுப்பறைக் கட்டடங்களுக்குப் பதிலான புதிய மாடிக் கட்டடத்தை நிறுவுவதற்காக அடிக்கல் நடப்படவுள்ளது.

இன்று முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறவுள்ள இவ்வைபவத்தில் கூட்டுறவுக்கும் அபிவிருத்திக்குமான சுவிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் ஐவன் ஹாறி கலந்துகொள்கிறார்.

வெளிநாடுகளுக்கு உதவிகளை வழங்கும் சுவிஸ் முகவர் நிறுவனமானது கல்வித் திணைக்களத்தின் ஊடாக போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் புனரமைக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறது. இந்தப் பாடசாலைகள் புனரமைப்புத் திட்டத்துக்கு சுவிஸ் அரசு 3 கோடி 30 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இதன் மூலம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியும், சாவகச்சேரி மகளிர் கல்லூரியும், யாழ். கலட்டி, நுணாவில் மேற்கு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளும் புனரமைக்கப்படவுள்ளன.

சுவிஸ் அரசின் 2003 - 2004 ஆண்டுக்கான புனரமைப்புத் திட்டமாக இந்தப் பணிகள் இடம்பெறுகின்றன.(ஐ)

### மூதூரில் வழமை நிலை

மூதூர்,நவ.5

மூதூரில் நேற்று முதல் பஸ் சேவைகளும் தபால் விநியோகமும் மீண்டும் ஆரம்பமாகின. கடந்த 26 ஆம் திகதி முதல் மூதூரில் நிலவிய பதற்றம் இப்போது முற்றாக நீங்கியுள்ளது.

ஆனாலும், மூதூர் நகரில் தமிழ் மக்களின் நடமாட்டம் மிகக் குறைவாகக் காணப்பட்டது. நகர வீதிகளில் இராணுவமும் பொலீஸாரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மூதூர்-திருமலை பயணிகள் படகுச் சேவையில் தமிழ்மக்களும் பயணம் செய்வதை நேற்றுக் காணக் கூடியதாகவிருந்தது.

# திருமலைக் கடற்கரையில் ஒதுங்கிய ஆணின் சடலம்!

திருகோணமலை,நவ.5

திருகோணமலை கோணேசர் ஆலய வீதிக் கடற்கரையில் இளைஞர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது. பிரேதப் பரிசோதனைக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பிரேதம் கரையொதுங்கியுள்ளதாக தமக்கு கிடைத்த தகவலை அடுத்து அதிகாலை 5 மணியளவில் தாம் அங்கு சென்றதாக திருகோணமலைப் பொலீஸ் குற்றவியல் பதில் பொறுப்பதிகாரி சப். இன்ஸ்பெக்டர் எச்.ஆர்.எம் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து காலை 9 மணியளவில் திருமலை நீதிமன்ற நீதிவான் எஸ்.தியாகேந்திரன் சடலத்தைப் பார்வையிட்டார். இறந்தவர் சுமார் 35 வயது மதிக்கத்தக்கவர். கறுப்பு நிறம். சுமார் 5 அடி 5 அங்குலம் மதிக்கத்தக்க பருமனானவர். கரையொதுங்கிய போது வெள்ளை நிற பெனியனும், நீலநிற உள்ளாடையும் அணிந்திருந்தார். சடலம் பழுதுபடாத நிலையில் உள்ளது.

அவர் அணிந்திருந்த கைக்கடிகாரம் இன்னும் தொழிற்படுகிறது.

சடலம் யாருடையது என்று இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திருமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். (ஒ)

# புலிகளின் வரைவு குறித்து கருத்தறிய மாவட்டங்களில் இருந்து பிரதிநிதிகள்!

## கொழும்பில் சனியன்று பீரிஸ் கூட்டம்

காரைதீவு,நவ.5

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான அபிப்பிராயங்களும் ஆலோசனைகளும் பொதுமக்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்படவிருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கொண்டு வருகிறார். ஆலோசனைக் கூட்டத்துக்கு 25 மாவட்டங்களிலிருந்து 25 பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. அம்பாறை மாவட்டத்திலிருந்து "சூடோ விஷன்" நிறுவனப் பணிப்பாளர் ஆர். வசந்தன் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார். (ஒ)

# கொழும்பில் ஆர்ப்பாட்ட பேரணிக்கு ஏற்பாடு

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாக வரைவைக் கண்டித்து ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்துவதற்கு தேசாபிமான இயக்கம் ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு மாநகர சபைத் திடலில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டம், பொதுக் கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொள்ளுமாறு கோரும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. (ஒ)

# கற்பிட்டி மீனவர் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது

## நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

கற்பிட்டி மீனவர்களின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று உச்சக் கட்டத்தை அடைந்தது.

இப்போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே போக்குவரத்துச் சேவைகள் நடைபெற்றன. இப்பகுதியிலிருந்து வெளியிடங்களுக்கு மீன், காய்கறி, கருவாடு என்பனவற்றைக் கொண்டு செலவதிலும் பாதிப்பு ஏற்பட்டது. கற்பிட்டி பொலீஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டனர்.

'லைலா' ரக மீன்பிடி வலையைப் பாவித்து மீன்பிடிப்பதற்கு விதித்துள்ள தடையை ஆட்சேபித்து இப்போராட்டம் நடைபெறுவது தெரிந்ததே.

இப்பிரச்சினை குறித்து நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் வெளிநாட்டிலுள்ள கடற்றொழில் அமைச்சர் மஹிந்த விஜயசேகரவிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடனடி மாற்று நடவடிக்கைகளை எடுக்கும்படி கோரியிருக்கிறார். (ஒ)

### பரிசளிப்பு தினம்

தென்மராட்சி,நவ.5

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசுத்தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் இ.தயிலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) கலந்துகொள்வார்.

கடந்த 1999, 2000, 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் தெரிவான மாணவர்களுக்கும் இவ்வருடங்களில கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-31-117)

# 2004 தேர்தலில் புஷ் மீண்டும் ஜனாதிபதியாவாரா? ஈராக் பிரச்சினை அவரது காலை வாரிவிடுமாம்!

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் போட்டியிடவுள்ள புஷ்ஷின் வெற்றிக்கு குறுக்கே, ஈராக் பிரச்சினை மிகப்பெரிய தடைக்கல்லாக இருக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

ஈராக் பிரச்சினையில் ஜனாதிபதி புஷ் காட்டிய வேகம் ஆரம்பத்தில் அமெரிக்க மக்களிடம் ஜனாதிபதி புஷ் மீதான செல்வாக்கைப் பெருகச செய்தன. ஆனால், ஆக்கிரமிப்பு இராணுவமாக ஈராக்கிலேயே அமெரிக்க வீரர்கள் தங்கியுள்ளனர்.

அவர்கள்' மீது தீவிரவாதிகள் நாளாந்தம் கெரில்லாத் தாக்குதல் நடத்தி வருகின்றாகள். தற்கொலைப் படையினர் கார்வெடிகுண்டு மூலம் தாக்குதல் நடத்துகின்றனர். கடந்த மூன்று நாள்களுக்கு முன் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி, ஓர் அமெரிக்க ஹெலியை கெரில்லாக்கள் சுட்டு வீழ்த்தினர். இதில் 15 அமெரிக்க வீரர்கள் பலியானார்கள்.

இப்படி நாளாந்தம் நிகழும் வன்முறை மரணங்கள் அமெரிக்கர்கள் மத்தியில் கலகத்தை ஏற்படுத்தியுள்ளன. வேறொரு நாட்டுக்காக நாம் ஏன் உயிரை விடவேண்டும் என்ற எண்ணம் அமெரிக்க வீரர்களின் உறவினர்களிடம் ஏறபட்டுள்ளது. இதனால் அமெரிக்கர்கள் மத்தியில் ஜனாதிபதி புஷ் மீதான செல்வாக்குச் சரிந்து வருகிறது.

அடுத்த ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கிறது. அதில் குடியரசுக்கட்சி சார்பில் ஜனாதிபதி புஷ் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடப்போவது யார் என்பது அறிவிக்கப்படவில்லை.

யார் போட்டியிட்டாலும் ஜனாதிபதி புஷ் மீண்டும் வெற்றி பெறுவது என்பது இன்றைய நிலையில் கடினமானது என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்தினருக்காகவும், ஈராக்கை சீரமைப்பதற்காகவும் 87 மில்லியன் டொலரை செலவழிக்க அமெரிக்க



பக்தாத் நகர வீதியில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் அமெரிக்கச் சிப்பாய். நேற்றும் அங்கு நடந்த குண்டுத்தாக்குதலில் அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

நாடாளுமன்றத்திடம் ஜனாதிபதி புஷ ஒப்புதல் பெற்றிருக்கிறார். இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்ததால் அமெரிக்க பட்ஜெட்டில் முதல்முறையாக பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதுவும் அமெரிக்கர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

அண்மையில் நடந்த கருத்துக் கணிப்பில், ஜனாதிபதி புஷ்ஷுக்கு ஆதரவாக 56 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. ஆனால், தீவிரவாதம் குறித்த பீதி அமெரிக்கர்களிடம் இன்னும் இருக்கும் நிலையில், அதைத் தடுக்க உள்நாட்டில் ஜனாதிபதி புஷ் கடும் நடவடிக்கை எடுக்கும் போது அவரது சரிந்த செல்வாக்கு உயர்ந்துவிடும் என்று குடியரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி புஷ்ஷின் சரிந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதில் ஜனநாயகக் கட்சியினர் குறியாக இருக்கிறார்கள். (ஐ)

# அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை மிரட்டல் என்றே சதாம் நம்பினாராம்

'ஈராக்கில் தனது படைகளை அமெரிக்கா குவிப்பது தன்னை மிரட்டுவதற்கு நடத்தப்படும் நாடகம் என்று சதாம் கடைசிவரை நம்பினார். அதனால்தான் அமெரிக்கப் படைகளை எதிர்த்து அவர் உடனடியாகத் தாக்குதல் நடத்த உத்தரவிடவில்லை' - என்று சரணடைந்த ஈராக் முன்னாள் துணைப்பிரதமர் தாரிக் அசிஸ் கூறியுள்ளார்.

ஈராக்கின் முன்னாள் துணைப் பிரதமர் தாரிக் அசிஸ் கடந்த ஏப்ரல மாதம் அமெரிக்கப் படையினரிடம் சரண் அடைந்தார். அவரிடம் அமெரிக்க அதிகாரிகள் நடத்திய விசாரணையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப்படையினர் ஈராக்கில் அணிவகுக்கத் தொடங்கியதும், சதாம் தனது இராணுவத்தினரை பதில் தாக்குதல் நடத்தும்படி உத்தரவிடவில்லை. ஏனெனில், படையெடுப்பு நடந்தாலும் தன்னால் உயிர்வாழ முடியும் என அவர் நம்பினார். ரஷ்ய மற்றும் பிரான்ஸ் நாட்டில் உள்ள மத்தியஸ்தர்களுடன் ஆலோசனை நடத்தி போரைத் தவிர்க்க முடியும் என சதாம் நம்பினார்.

கடந்த ஆண்டின் பிற்பகுதியிலும், இந்த ஆண்டின் முற்பகுதியிலும் ரஷ்ய மற்றும் பிரான்ஸ் நாட்டு மத்தியஸ்தர்கள் சிலர் சதாமிற்கு ஆறுதல் கூறினர். அப்போது அமெரிக்காவின் போரை ஐ.நா. பாதுகாப்பு சபை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுப்போம் என்று உறுதி அளித்தனர். அதனால், அமெரிக்கா உடனடியாக ஈராக் மீது போர் தொடுக்க வாய்ப்பில்லை என்று சதாம் உறுதியாக நம்பினார்.

அமெரிக்கா, ஈராக்கில் படைகளை இறக்கி போர் நடவடிக்கைகளை ஆரம்பித்த போதும் கூட அது அமெரிக்காவின் மிரட்டல் நாடகம் என்றே சதாம் நினைத்தார். அதனால், உடனடியாக பதில் தாக்குதல் நடத்த சதாம் தனது படைகளுக்கு உத்தரவிடவில்லை - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால், தாரிக் அசீசின் இந்த வாக்குமூலங்கள் அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்ட ஈராக்கிய பிரமுகர்கள் அளித்த வாக்கு மூலங்களுக்கு முரணாக உள்ளன என்று கூறப்படுகிறது. (ஐ)

# ஈராக்கில் இருந்து அமெரிக்கா ஓடுமென கனவு காணாதீர்கள்!

## ஜனாதிபதி புஷ் சூளுரை

பக்தாத்,நவ.5

ஈராக்கில் நடக்கும் தாக்குதலுக்குப் பயந்து அமெரிக்கா அங்கிருந்து ஓடப் போவதில்லை என ஜனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

ஈராக்கில் கடந்த 2ஆம்திகதி அமெரிக்க ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டபின் தாக்குதல்கள் மூர்க்கமடைந்துவருகின்றன. அமெரிக்கப் படை திடீரென



அங்கிருந்து பின்வாங்கலாம் என்று கூறப்படுகின்றது. இந்நிலையிலேயே ஜனாதிபதி புஷ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் இது குறித்து கூறிய ஜனாதிபதி புஷ் -

ஈராக்கில் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. தீவிரவாதத்துக்கு எதிரான போர் உச்சக்கட்டத்தை நெருங்கியுள்ளதையே இது காட்டுகின்றது.

சதாமின் ஆதரவாளர்களுடன் இணைந்துள்ள வெளிநாட்டுத் தீவிரவாதிகளே தாக்குதலை மூர்க்கமாக நடத்திவருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களுக்குப் பயந்து அமெரிக்கா அங்கிருந்து ஓடிவிடாது.

ஈராக்கின் நன்மைக்காகவும் அமெரிக்காவின் பாதுகாப்புக்காகவும் படையினர் அங்கு தங்கியிருப்பர்.

அத்துடன், அமெரிக்க உதவி நிறுவனங்களும் ஈராக்கில் இருந்து வெளியேறாது. தீவிரவாதத்தை ஈராக்கில் இருந்து ஒழிக்கும் வரை அமெரிக்கப் படையினர் அங்கிருப்பதை எவரும் தடுத்துவிடமுடியாது என்றார்.

இதற்கிடையே -

திக்ரித் நகரில் கடமையில் இருந்த அமெரிக்கபடைவீரர் ஒருவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார்.

கர்பலாவில் இடம்பெற்ற மற்றொரு குண்டுத்தாக்குதலில் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார்; இரண்டு படையினர் காயமடைந்தனர்.

இந்த இரு சம்பவங்களையும் அடுத்து அப்பகுதியை முற்றுகையிட்ட படையினர் அங்கு தேடுதல்களை நடத்தினர்.

குறிப்பாக வைக்கோல் கட்டுகளுக்குள், எருக்குவியல்களுக்குள் அவர்கள் ஏவுகணைகளைத் தேடினர்.

ஈராக்கியர் ஒருவர் ஏவுகணை ஒன்றை காட்டித் தந்தால் 500 டொலர் பணம் வழங்கப்படும் என்று தேடுதலில் ஈடுபட்ட படையினர் தெரிவித்தனர்.

# இந்தோனேஷிய வெள்ள அனர்த்தம்: 170பேர் பலி; பலரைக் காணவில்லை!



உயிரிழந்தவர்களின் சடலங்களை அடையாளம் காண்பதற்காகக் கூடியுள்ள பொதுமக்கள்.

ஜகார்த்தா,நவ.5

இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டோரின் எண்ணிக்கை 170 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 80 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் பலரைக் காணவில்லை. காணாமற் போனோரைத் தேடும் பணியில் மீட்புப் பணியாளர்களும், இராணுவத்தினரும் ஈடுபட்டுள் ளனர். இவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலாப் பயணிகளாவர்.

இறந்தவர்களில் ஆறு பேர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை மெதன்ஸ் நகிலுள்ள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மீட்புப்பணியாளர்களுடன் இணைந்து முந்நூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காணாமற்போனோரைத் தேடி வருகின்றனர்.

காணாமற்போனோர் சேற்றினுள்ளும், மரக்குற்றிகளுக்கு கீழேயும் அகப்பட்டு இறந்திருக்கலாம் என்று அனர்த்த விவகாரங்களைக் கவனிக்கும் அதிகாரி டொனா பாசரில் தெரிவித்துள்ளார்.

சுமார் இருபது நிமிடங்களுக்குள்ளேயே மேற்படி அனர்த்தம் நடந்திருக்கிறது. சுமத்திரா தீவின் ஆற்றங்கரையில் தற்காலிகமாக குடிசைகளை அமைத்துத், தங்கியிருந்த சுற்றுலாப் பயணிகளே இந்த அனர்த்தத்தில் கொல்லப்பட்டவர்களாவர்.

மேற்படி ஆறு திடீரெனப் பெருக்கெடுத்ததால், அங்கிருந்த பத்துக்கும் மேற்பட்ட குடிசைகள் அப்படியே அடித்துச் செல்லப்பட்டன. அதற்குள் இருந்தவர்கள் அனைவரும் இறந்துள்ளனர் என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இரண்டு நாள்களாக அங்கு பெய்த அடை மழையே மேற்படி அனர்த்தம் நிகழக் காரணமெனக் கூறப்படுகிறது.

இந்த அனர்த்தத்தில் இரண்டு பஸ்களும், இருபதுக்கும் மேற்பட்ட கார்களும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ஏழு பாலங்கள் தகர்ந்து வீழ்ந்துள்ளன. குறிப்பாக இத்தீவில் உள்ள பூங்கா ஒன்றே மேற்படி அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவில் மரக்குற்றிகள் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. ஆறு பெருக்கெடுத்தபோது இங்கிருந்த மரக்குற்றிகளும் அடித்துச் செல்லப்பட்டன. இவ்வாறு அடித்துச் செல்லப்பட்ட மரக்குற்றிகள் குடிசைகளை மோதித் தகர்த்துள்ளன. என்று கூறப்படுகிறது.

"இந்த அனர்த்தத்திற்கு இயற்கை மட்டும் காரணமல்ல. மனிதர்களும் காரணமாக உள்ளனர். மேற்படி பூங்காவில் சட்டவிரோதமாக மரக்குற்றிகள் போடப்பட்டிருந்தன. இவையே அழிவைப் பெரிதாக்கிவிட்டன"

-- என்று சுமத்திரா தீவின் தலைவர் ஸரிபின் கூறியுள்ளார்.

# பிறேஸில் பொலீஸ் நிலையத்தில் கைதிகள் சிறையுடைத்து ஓட்டம்!

பிறேஸிலின் மிகப்பெரும் நகரான சாவொபோலோவில் உள்ள பொலீஸ் நிலையத்தில் கைதிகள் சிலர் சிறையுடைத்து தப்பியோடினர்.

நேற்றுமுன்தினம் இச்சம்பவம் நடந்தது. மேற்படி பொலீஸ் நிலையம மீது இயந்திரத் துப்பாக்கிதாரிகள் திடீரெனத் தாக்குதல் நடத்தினர். இதில இரண்டு பொலீஸார் காயமடைந்தனர். இந்தச் சூழ்நிலைமையைப் பயன்படுத்தியே, கைதிகள் சிலர் சிறையுடைத்து தப்பியோடினர். மேலும் பலர் இவ்வாறு தப்பியோட முயன்றனர்.

ஆனால், பொலீஸார் உடனடியாக நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். சிறையிலிருந்த போதைப்பொருள் கும்பல் ஒன்றே துப்பாக்கிதாரிகளைத் தாக்குதல் நடத்தத் தூண்டி சிறையுடைத்து தப்பியோடியுள்ளது என்று கூறுகின்றனர்.

தப்பியோடிய கைதிகளில் ஒருவர் பொலீஸாரின் துப்பாக்கி குண்டு பாய்ந்து உயிரிழந்தார். அன்றையதினம் பல பகுதிகளிலும் உள்ள பொலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன என்றும் பொலீஸார் கூறியுள்ளனர். (ஐ)

# மக்காவில் துப்பாக்கிச் சண்டை: 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

ரியாத்,நவ.5

முஸ்லிம்களின் புனித நகரான மக்காவில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அல்கெய்டா இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் பொலீஸாரையும் இராணுவத்தினரையும் நோக்கி சரமாரியாகச் சுட்டனர்.

இதனால், அங்கு சண்டை மூண்டது. சுமார் இரண்டு மணிநேரத்திற்கும் மேலாக நடந்த சண்டையில் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அங்கிருந்த ஏனைய தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டனர்.

தீவிரவாதிகள் இருந்த கட்டடத்தில் இருந்து இரண்டு துப்பாக்கிகளும் கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.



பாதுகாப்புப் பணியில் சவூதிப் படையினர்

'தீவிரவாதிகளின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது. தப்பியோடிய தீவிரவாதிகளைத் தேடிவருகின்றோம். முஸ்லிம்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவே இவர்கள் முயன்றுள்ளனர். இவர்கள் மக்காவின் புனிதத் தன்மையில் நம்பிக்கை இல்லாதவர்கள்' - என்று சவூதி பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இருவரே சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று சவூதி அரசு அறிவித்துள்ளது.

தீவிரவாதிகள் குறித்த பகுதியில் உலாவுகின்றனர் என பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தது. அப்பகுதியை பொலீஸாரும், இராணுவத்தினரும் திடீரெனச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

அப்போது கட்டடம் ஒன்றுக்குள் மறைந்திருந்த தீவிரவாதிகள் (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள IBM 400 MHz 6.4 H.D (G.B) 64 MB, Ram கணனி விற்பனைக்குண்டு. தொடர்பு: 302/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (24396)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் விடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24284)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் குறைந்த விலையில் 10.11.2003 பிற்பகல் விநியோகிக்கப் படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக கொள்ளலாம். (நல்லூர் விடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(24287)

### வெளிநாட்டவர்களே!

யாழ்ப்பாணத்தில் நடந்தவற்றை அறிய வேண்டுமா? கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூலகளை வாசியுங்கள். 1.யாழ்ப்பாணமா? கொழும்பா? 2.யாழ்ப்பாணம் ரூபா 50/= 3.எங்கள் நாடு ரூபா 75/=, 4. ஒரு காதலின்கதை ரூபா 150/=. (24417)

### தவறிவிட்டது

ஓமந்தை சோதனை நிலையத்துக்கு அருகில் முக்கியபொருள்கள் அடங்கிய நீலநிற பாக் ஒன்று 23.10.2003 அன்று காலை 8.00 மணிக்கு தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப் படும். க.சிவசுதன், "மணி மகால்", மகாத்மா லேன், நெல்லியடி. T.P. 021 2263354. (24407)

### திருமண சேவை

1969, பரணி, பாவம் 14, ஆசிரியை. 1971 சதயம் 7இல் செவ்வாய், பாவம் 35 ஆசிரியைக்கும் படித்த, சொந்தமாக நகைத் தொழில் செய்யும் மணமக்கள வேண்டப்படுகின்றனர். நாடுங்கள் இலகு திருமண சேவையை. துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ். (24409)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.5

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அதிபர் நா.சண்முகரத்தினம் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் மற்றும் வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.யாழவன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ம)

**நியூ றோயல் அக்கடமி**

சங்கத்தானை

**A/L Day 2004**

வரலாறு துரித மீட்டல்

By: சுஜீகரன்

ஆரம்பம்: 06-11-2003

வியாழன் 10.00a.m.

A/L2004, 2005 வர்த்தகம்

Acc. முகுந்தன்

Eco. ஜெயக்குமார்

B.st. உமாக்காந்

வகுப்புகள் நடைபெறுகின்றன. (24419)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 13 - 07 - 1929



மறைவு 22 - 10 - 1999

**திருமதி செல்வரத்தினம் நடராஜா**

திதி: 05.11.2003 (புதன்கிழமை)

கோலம் போட்ட முற்றம் கொலுவிழந்து கிடக்குதம்மா
காலங்காலமாய் இருந்த வீடும் கைநழுவிப்போனதம்மா
நீ இருந்த நாள்களெல்லாம் நிம்மதியாய்க் கழிந்ததம்மா
ஈரிரண்டு ஆண்டுகளாய் சீர் குலைந்து போனோமம்மா

பிரிவால் வருந்தும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"செல்வவாசா",
கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

தற்காலிகம்:
சேதுபதி,
நெல்லியடி வடக்கு,
நெல்லியடி.

(24424) (34-11-14-21)

## கணனி வகுப்புகள்



**க.பொ.த. உயர்தர வகுப்புப் பரீட்சைக்குரிய பாடத் திட்டத்திற்கேற்பவும், சிறுவர்களுக்கான கணனி அறிமுகமும், ஏனையோருக்குமான தனிப் பட்ட ரீதியில் கணனிக் கல்வியும் போதிக்கப்படும். கணனி அச்சுப் பதிப்புக்கள், கணனி திருத்த வேலைகள் என்பனவும் மேற்கொள்ளப்படும்.**

புதிதாகக் கற்கை நெறியில் இணைய விரும்புவோர் 20.11.2003 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு நேரம்:
பி.ப.2.00 - 7.00
528,பலாலி வீதி, திருநெல்வேலி.
(24419) தொலைபேசி 021 2223822. (26-21-31-11)

## திருமண அழைப்பு

உ
சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் ஐப்பசி மாதம் 19ஆம் நாள் (05.11.2003) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் 11.00 மணி வரையுள்ள சுபயோக சுபமுகூர்த்த நல்வேளையில்

திருநிறை செல்வன்
**ரவீந்திரன் (ரவி)**
(ரவி விடியோ சென்ரர்)



திருநிறை செல்வி
**பிறேமிளா**
**(பிறே)**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.செ.நாகராசா, திருமதி நா.யோகம்மா
இல. 169, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். 021 222 3082

(இருவீட்டார் அழைப்பு)

திரு. ந.விஜயரட்ணம், திருமதி வி.புஷ்பலீலா
"புஸ்பநிவாஸ்", அண்ணா சிலையடி,
காரணவாய் தெற்கு, கரவெட்டி.

(24420)

## வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்

1. காசாளர் - ஆண்கள் 4 பேர்
   - பெண்கள் 2 பேர்
2. இடியப்ப வேலையாள் - 1
   உதவி ஆள் - 1
3. குசினி வேலை ஆள்கள்
4. உணவு பரிமாறுவோர் - (சப்ளையர்ஸ்)

விண்ணப்பிப்போர் நற்குணமும், நற்பண்பும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: (24416)

**"மலாயன் கபே"**

36,38, பெரியகடை, யாழ்ப்பாணம்.
ரெலிபோன்: 021-2373, 0777 146844

## திருமண அழைப்பு

உ
சிவமயம்

அன்புடையீர்,

நிகழும் சுப மங்களகரமான சுபானு வருடம் ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் இன்று (05-11-2003) புதன்கிழமை பகல் 9.09மணி முதல் 11.16 மணிவரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எங்கள் புத்திரன்
திருநிறை செல்வன்
**தியாகேஸ்வரன்**



எங்கள் புத்திரி
திருநிறை செல்வி
**சுவர்ணா**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம்:- இல.1, கோலம்பாக்கம் பிரதான வீதி,
சென்னை 600116, தென்இந்தியா.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திரு.திருமதி கனேசு
கிளாலி வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

தற்காலிக முகவரி:
ஞானவைரவர் கோவில் வீதி,
கோண்டாவில்கிழக்கு, கோண்டாவில்
T.P. 077 6159296.

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி கிருஷ்ணபிள்ளை
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
T.P.0777 119026.

(23945)

## சேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைக்குவாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விவரங்களுக்கு 0777 871617 தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

பாலா
தெஹிவளை.
(24196)

## கம்பியூட்டருக்கு ஆள் தேவை

போட்டோ பிரதி, ஷாப் செற்றிங் தெரிந்த அனுபவம் வாய்ந்த ஆள்தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப் படும். இன்று (05.11.2003) புதன் காலை 8.00 - மாலை 7.00

**A.T.M. Links,**
303 A. Palaly Road,
Jaffna.
Tel. 222 7251.
(24408)




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட



LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

உதயன்

# சர்வதேச வலை மூலம் இறுக்குகிறது அரசு

இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கு அமைதித தீர்வுகாணும் சமாதான நடவடிக்கைகளில் தனது பேரம்பேசும் வலுவைத் தொடர்ந்து அதிகரிப்பதில் இலங்கைத் தரப்பு முனைப்பாகவும் மும்முரமாகவும் இருக்கின்றது.

இந்த நடவடிக்கைகளில் தமிழர் தரப்பின் ஏக பிரதிநிதிகளாகக் கலந்துகொள்பவர்கள் விடுதலைப் புலிகளே, இவர்களுக்கு எதிராக சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை ஆழமாகப் பின்னி, அவர்கள் மீது சர்வதேசம் மூலம் அதிக அழுத்தத்தைப் பிரயோகித்து, அதன் வாயிலாகத் தான் விரும்பும் அரைகுறைத் தீர்வுக்கு அவர்களை இணங்கவைக்கும் மறைமுகத் திட்டத்தில் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது இலங்கை அரசு.

பிரதமர் ரணிலின் கடந்த மாத இந்திய விஜயமும், தற்போதைய அமெரிக்க விஜயமும், அவையிரண்டையும் ஒட்டி வெளியாகும் செய்திகளும் அவரது அரசு மறைமுகமாக மேற்கொண்டு வரும் காய்நகர்த்தல்களையும் அவற்றின் பின்னணிகளையும் ஓரளவு அம்பலப்படுத்தத் தவறவில்லை.

இந்தியாவில் பிரதமர் ரணிலின் விஜயம் முடியும் தறுவாயில் வெளியிடப்பட்ட இரு நாடுகளினதும் கூட்டறிக்கையில் எதிர்காலத்தில் இரு நாடுகள் இடையேயான கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விஸ்தரிப்பது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு இலங்கை - இந்தியப் பிரதமர்கள் பேச்சு நடத்தி இணக்கம் கண்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

அது பாதுகாப்புத் தொடர்பான கூட்டுறவு நடவடிக்கைகள் பற்றிய ஒப்பந்தமா அல்லது பரஸ்பர பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒப்பந்தமா என்பதில் மயக்கம் தரக்கூடிய விதத்தில் கூட்டறிக்கை வாசகத்தை அமைத்ததன் மூலம் இவ்விடயத்தை 'அமுக்கி' வாசித்தன இரு தரப்பும்.

இப்போது அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கேயும், அமெரிக்காவுடன் இலங்கை பாதுகாப்பு விடயங்களில் ஒத்துழைத்துச் செயற்படும் விவகாரம் குறித்து அதிக சிரத்தை எடுத்துப் பேச்சு நடத்தியிருக்கின்றார்.

இதற்காக அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனுக்கு நேரடியாகச் சென்ற பிரதமர், அங்கு அமெரிக்க பாதுகாப்பு உதவிச் செயலாளர் வோல் பிட்ஸ்டன் விரிவாக ஆராய்ந்திருக்கின்றார்.

இலங்கையில் நடைபெறும் இனயுத்தத்துக்காக ஒரு துப்பாக்கி ரவையைக் கூட இலங்கைக்கு விற்பனை செய்வதில்லை என்று இதுவரை காலமும் தீர்மானித்து அதன்படி செயற்பட்டு வந்த அமெரிக்கா, தற்போது பிரதமர் ரணிலின் அமெரிக்க விஜயத்தை அடுத்து இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்யவும், இலங்கையின் பாதுகாப்புத் தேவைகளுக்கு ஓர் உதவு தொகையை வழங்கவும் முன்வந்திருக்கின்றது. இந்த விடயத்தில் அமெரிக்கா தற்போது வழங்க முன்வந்துள்ள உதவு தொகை ஆகப் பதினைந்து கோடி ரூபாதான். இலங்கையின் பாதுகாப்புச் செலவினத்தோடும் அமெரிக்கா போன்ற பெரிய நாட்டுடனும் ஒப்பிடும் போது இந்த உதவு தொகை ஒரு கடுகளவு தான். ஆனால், அது இலங்கையில் சமாதானம் நிலவும் காலத்தில் இலங்கையின் பாதுகாப்புத் தேவைகளுக்கு வழங்கப்படும் உதவு தொகை என்பதையும் இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் கொள்கைப் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை வெளிப்படுத்துகின்றது என்பதையும் தமிழர் தரப்பு ஊன்றிக் கவனிப்பது நல்லது.

அதேசமயம், இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகள் சமர்ப்பித்த திட்ட வரைவை பொதுவாக அமெரிக்கா வரவேற்றுள்ளது. ஆனால், டோக்கியோவிலும், ஒஸ்லோவிலும் கொள்கை ரீதியாகக் காணப்பட்ட இணக்கங்களை மீறியதாக இந்தத் திட்ட வரைவு அமைந்திருக்கின்றது என அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் பகிரங்கமாகக் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தக் கருத்தையும் கூட, சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகத் தமிழர் தரப்பு மீது பிரயோகிக்கப்படும சர்வதேச அழுத்தத்தின் ஒரு ரகமாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஆனால், ஈழத்தமிழரின் உரிமைக்கான போராட்டத்தைக் கடந்த இரண்டு தசாப்த காலமாக அவதானித்து வருவோருக்கு ஒரு விடயம் நன்குபுரியும். அழுத்தங்கள் மூலம் தமிழர் தரப்பை அடக்கி, ஒடுக்கி, இணங்க வைக்க முடியாது என்பது தான் அது.

இந்தியா, இலங்கை அரசு போன்றவை இவ்விவகாரத்தில் நல்ல பாடங்களை படிப்பினையாகக் கற்றுக் கொண்டுள்ளன.

ஆனாலும், சூடு கண்ட பூனை மீண்டும், மீண்டும் அடுப்பங்கரையை நாடுவதாகவே யதார்த்தத்தில் செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அத்தகைய போக்கு பலன்தராது. போருக்கே வழி செய்யும் என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்வது நல்லது.

## காலத்தின் பதிவு



நானிருக்கப் பயம் ஏன்...? படம்: நாமாக

# வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் செயலகத்தில் பூர்த்தி; ஆட்சேபனைகள் ஏற்பு!

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்தினால் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்த வாக்காளர் இடாப்புத் திருத்தியமைத்தல் தொடர்பான பணிகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன.

இதன்படி, வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்கப்படவேண்டியவர்களின் பெயர்கள் அடங்கிய 'ஏ' பட்டியலும், வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படவேண்டியவர்களின் பெயர்கள் அடங்கிய 'பி' பட்டியலும் யாழ். தேர்தல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு யாழ். செயலகத்தில் உள்ள தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்கள், அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றில் பொதுமக்களின் பார்வைக்கென வைக்கப்பட்டுள்ளன.

இதனைவிட, மேற்குறிப்பிட்ட பட்டியல்கள் கிராமசேவகர் பிரிவு ரீதியாகப் பிரித்தெடுக்கப்பட்டு அந்தந்தப் பகுதிக் கிராம சேவகர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் 'அ', 'ஆ' எனப்படும் உரிமைக் கோரிக்கைப் படிவங்களும், 'இ', 'ஈ' எனப்படும் ஆட்சேபனைப் படிவங்களும் கிராம அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் இடாப்பினை கிராம அலுவலரிடம் பார்வையிட்ட பின்னர் அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அல்லது சேர்க்கப்பட வேண்டியவர்களின் பெயர்களைச் சேர்ப்பதற்கும், இது தொடர்பான ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கும் கிராம அலுவலரிடம் உள்ள 'அ', 'ஆ', 'இ', 'ஈ' ஆகிய படிவங்களில் பொருத்தமானவற்றைப் பெற்று, அதனைப் பூர்த்திசெய்த பின்னர் நேரடியாகவோ அல்லது கிராம அலுவலர் ஊடாகவோ யாழ். தேர்தல் அலுவலகத்திற்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டுமென யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.நடராசா அறிவித்துள்ளார். திருத்தங்களை மேற்கொள்வதற்கென 'அ', 'ஆ', 'இ', 'ஈ' ஆகிய படிவங்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுமாயின் அதனை யாழ். தேர்தல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-8)

# கண்ணி அகற்றும் பிரதேசத்தில் நடப்பட்ட அடையாளக் கம்பங்கள் விஷமிகளால் சூறை!

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். ரயில் நிலையப் பகுதியில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபடும் நிறுவனத்தினால் மிதிவெடியகற்றும் இடங்களை அடையாளப்படுத்துவதற்கென நடப்பட்ட 300இற்கும் மேற்பட்ட அடையாளக் கம்பங்களை விஷமிகள் சிலர் கடந்த 2 ஆம் திகதி அபகரித்துச் சென்றுள்ளனர்.

யாழ். செயலகத்தில் உள்ள மிதிவெடியகற்றும் பிரிவின் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

விஷமிகளின் இத்தகைய செயற்பாட்டினால் மிதிவெடியகற்றும் பணி மிகவும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். ரயில் நிலையப் பகுதியில் 'ஹலோ ட்ரஸ்ட்' என்னும் மிதிவெடியகற்றும் நிறுவனம் கடந்த ஒரு வாரகாலமாக மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதன்போது வெடிபொருள்கள் அகற்றப்படும் இடங்களை இனங்காண்பதற்கும், பணிகளை ஆரம்பிப்பதற்குமென அடையாளமாக நடப்பட்ட கம்பங்களையே விஷமிகள் சிலர் அபகரித்துள்ளனர். கடந்த இரண்டாம் திகதி 300 இற்கும் மேற்பட்ட கம்பங்கள் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் மிதிவெடியகற்றும் பணியாளர்கள் பலத்த சிரமங்களையும் ஆபத்துகளையும் எதிர்நோக்குகின்றனர். அத்துடன், இப்பணியை மேற்பார்வை செய்யும் வெளிநாட்டு நிபுணர்களும் இந்நடவடிக்கையினால் மனமுடைந்துள்ளனர். குடாநாட்டை ஒரு மிதிவெடியற்ற பூமியாக மாற்றுவதற்குப் பாடுபடும் இவ்வேளையில், இத்தகைய நடவடிக்கை எம்மைக் கடுமையாகப் பாதித்துள்ளது. இங்குள்ள மக்களின் பாதுகாப்புக்காகத்தான் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம் என கண்ணி அகற்றும் பணியில் ஈடுபடும் வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவர் கவலை வெளியிட்டிருக்கிறார்.

இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவதால் அது எமது மக்களுக்கே ஆபத்தாக அமைகிறது. எனவே, இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். குடாநாட்டில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபடும் பெரும்பாலான இடங்களில் மிதிவெடியகற்றும் பணியாளர்கள் இப்பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.

- இவ்வாறு செயலக அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-8-30)

# வடக்கே தார் விநியோகிக்க தனியார் முகவர் நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.5

வடக்கு - கிழக்கில் செயற்படும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு தார் விநியோகிப்பதற்காக முகவர் ஒருவரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நியமித்துள்ளது.

இதுவரை காலமும் இந்த நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான தாரை நேரடியாக கொழும்பில் இருந்து எடுத்து வந்தன. உரிய காலத்தில் தாரை எடுத்து வருவதில் நிலவிய தாமதநிலையால் வீதிதிருத்தும் பணிகள் பாதிக்கப்பட்டிருந்தன.

தற்போது தார் விநியோகிப்பதற்கான முகவராக ஏ.எம்.ரி. நிறுவனத்தைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நியமித்துள்ளதால் இனிமேல் தேவையான தாரை விரைவாக எடுத்துவர முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

### நாளை

ஐப்பசி 20
வியாழக்கிழமை
(06.11.2003)
திதி : திரயோதசி
பின்னிரவு 3.38 வரை.
நட்சத்திரம்:உத்தரட்டாதி
முற்பகல் 9.47 வரை
சுபநேரம்: 7.35 - 9.05
ராகுகாலம்: 1.35 - 3.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பகைகொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம். தீராத கோபம் யாருக்கு லாபம்.

# சைவக் குருமார் பயிற்சிக்கான கல்லூரி கட்டடம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.5

இரண்டாவது உலக இந்து மாநாட்டு ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம், திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் அமைக்கப்பட்ட சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரிக்கான புதிய கட்டடம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் செயலாளர் சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்பு விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் புதிய கட்டடத்தைத் திறந்துவைப்பார். (ஐ-8-31)

# பேச்சுக்கு ஹக்கீமின் அழைப்பை அதாவுல்லா ஏற்றுக்கொண்டார்

கொழும்பு.நவ.5

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், புலிகளின் வரைவு குறித்து கலந்துரையாட விடுத்த அழைப்பை அஷ்ரப் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டுள்ளது. இதன்படி, நாளை நடைபெறும் இக் கலந்துரையாடலில் அஷ்ரப் காங்கிரஸ் கலந்துகொள்ளும்.

இதனை அஷ்ரப் காங்கிரஸின் தலைவர் சுபைர்தீன் ஹாஜியார் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

புலிகளின் வரைவு குறித்து கலந்துரையாட அமைச்சர் ஹக்கீம் அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் அதாவுல்ல தலைமையிலான அதிருப்தியாளர்களும் (அஷ்ரப் காங்கிரஸ்) கலந்துகொள்வார்களா? என்று கேட்டபோதே, அதன் தலைவர் சுபைர்தீன் ஹாஜியார் கலந்துகொள்வோம் என்றார்.

காலம் கடந்த நிலையிலாவது அமைச்சர் ரவூப் ஹக்கீம் அனைத்து முஸ்லிம்களும் ஐக்கியப்படவேண்டும் என்பதை உணர்ந்துள்ளார்.

தமிழ் மக்களின் நீண்ட காலப் போராட்டத்தின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு கிடைத்த வெற்றி (புலிகளின் வரைவு) மகிழ்ச்சியைத் தருகின்றது. அதேவேளை, முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பது கவலையளிக்கின்றது என்றும் அவர் கூறினார். (ஓ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
19 - 11 - 1933



மறைவு
06 - 10 - 2003

திருமதி

### சிவஞானரத்தினம் இரத்தினம் (பூமணி)

ஐயிரண்டு திங்கள்ராய் அங்கமெலாம் நொந்து பெற்று
பையலென்ற போதே பரிந்தெடுத்து ~ செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்போம் இனி?

06-10-2003 அன்று சிவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (05.11.2003) புதன்கிழமை முற்பகல் 9 மணி முதலாக அவரது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அதன் பின் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

இவரின் பிரிவாற்றாமையால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
சகோதரன், உற்றார், உறவினர்.

"முருகன் அருள்"
நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (24385)

(35-21-15-19)



## மூன்றாம் ஆண்டின் நினைவாக...

மண்ணக வரவு
04 - 10 - 1955



விண்ணக வீரைவு
08 - 11 - 2000

யாழ்ப்பாணம் - வடமராட்சி - வடஅல்வைசேர்

திருமதி

### இராசகாந்தன் தங்கராணி

திதி:- 05.11.2003 (பூர்வபக்ஷ துவாதசி)

*அன்பின் திருவுருவான எங்கள் குலவிளக்கே!*
*உந்தன் பாதமலர் தடம்பதிந்த எம்மனையில்*
*அணையாத தீபமாய், அன்புத் தெய்வமாய்,*
*எமையெலாம் வாழவைக்கும் திருவுருவே!*
*எமைப்பிரிந்து மூன்றாண்டுகள் சென்றாலும்*
*என்றும் உங்கள் நினைவுதனை சுமப்பதே*
*எங்கள் கடனாகும் எம் பதிதனிலே!*

(24349)

"எழிலகம்",
அல்வாய் வடக்கு,
அல்வாய். (21-15-19)

கணவர் - இராசகாந்தன்,
மகன் - ரமேஷ் (லண்டன்),
மருமகள் - கௌதினி (லண்டன்),
பேரன் - தருண் (லண்டன்).


# நல்லூர் பிரதேச சபை

## 2004ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றை 2004ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2004ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் ***14.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரை*** நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை ***செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி*** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை ***பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்*** என்ற முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 12.11.2003ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00இற்கும் ரூபா 200,000.00இற்கும், குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 28.11.2003 ஆம திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும்.

### குறிப்பு:

01. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. I, II கொக்குவில் உப அலுவலக இறைச்சிக்கடைகள் ஆகியவற்றின் மூன்று மாத வாடகை ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் செலுத்தப்பட வேண்டும்.
02. சந்தைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்குவரும் பொருள்களின் பெறுமதியின் 3% இற்கு மேல் சந்தை வரி அறவிடக்கூடாது.
03. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 2.00இற்கும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 300இற்கும் மேல் பாதுகாப்புக்கட்டணம் அறவிடக்கூடாது.
04. தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்குப் புறம்பாக தொகையின் 20% வற் வரியாக செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பப்படிவத்தில் காட்டப்படுதல் வேண்டும்.
05. கேள்விப்பத்திரத் தொகையுடன் அதற்குரிய 20% வற் வரி செலுத்தப்படுதல் வேண்டும்.
06. இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தையும் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன். | 1,000.00 | 15,000.00 | 4,624,362.00 |
| 2. திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல.I | 350.00 | 5,000.00 | 84,000.00 |
| 3. திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல.II | 350.00 | 5,000.00 | 54,100.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. கொக்குவில் குளப்பிட்டிச் சந்தையும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 1,000.00 | 10,000.00 | 210,010.00 |
| 2. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை. | 350.00 | 5,000.00 | 126,000.00 |
| 3. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை. | 350.00 | 5,000.00 | 52,270.00 |
| 4. கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 210,000.00 |
| 5. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 52,500.00 |
| 6. கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும், மாட்டிறைச்சிக் கடையும் | 350.00 | 5,000.00 | 52,500.00 |
| 7. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி, மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,115.00 |

அரசடி வீதி மீன் சந்தைக்கு விண்ணப்பப் படிவம் கோருபவர் அதற்குரிய இடத்தை தெரிவுசெய்து காணி உரிமையாளரின் சம்மதக்கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
03.11.2003

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி-31120) (30-15-19-21)

# 'அவளது' இறுதிப் பயணம்....




- தாரணி -

வேகம்! இதை விரும்பாதவர் எவரும் இல்லை என்றே சொல்லலாம். தரையில் ஓடும் சாதாரண மோட்டார் சைக்கிளிலிருந்து விண்ணில் பேரிரைச்சலுடன் கடுகதி வேகத்தில் செல்லும் விமானங்கள் வரை, அவற்றில் பயணிப்போருக்கு இன்னும் வேகமாகச் செல்லவேண்டுமென்ற ஒருவித விருப்பு அடிமனதில் எப்போதும் இருந்துகொண்டே இருக்குமென்றால் அது பொய்யில்லை. அவ்வாறான வேகத்தின் மறுபெயர்தான் கொன்கோட் விமானம். ஆம், ஒலியைப்போல இருமடங்கு வேகத்தில் பறக்கும் சக்தி வாய்ந்த இவ்விமானத்தில் ஒருமுறையாவது பயணம் செய்துவிட வேண்டும் எனத் துடித்தோர் பலர். ஆனால், அந்த வாய்ப்பு எல்லோருக்கும் எளிதில் கிடைக்கவில்லை. கொன்கோட்டில் பயணிப்பதற்கு அதிக பணம் செலவிடவேண்டியிருந்ததால், பெரும் செல்வந்தர்கள், அரசியல்வாதிகள், பொப் இசை நட்சத்திரங்கள், நடிகர்கள், பெரிய வர்த்தகர்கள் போன்றோருக்கே அந்த அரிய வாய்ப்பு எளிதில் கிடைத்தது. கொன்கோட்டில் பயணம் செய்யும் அதிர்ஷ்டம் எமக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. அதை ஒருமுறை பார்த்தாலேபோதும் என, விமானங்களின் 'முடிசூடா' அழகுராணி என வர்ணிக்கப்படும் இவ்விமானத்தின் கவர்ச்சிகரமான விசேட வடிவமைப்பைப் பார்ப்பதற்கும், அது விண்ணில் எழுந்து செல்லும் அழகை ரசிப்பதற்கும், அது எழுப்பும் பேரிரைச்சலைக் கேட்பதற்கும் எனத் தவமிருந்தோர் பற்பலர்.

'அவளது' அழகை ஒருமுறையாவது தரிசித்து விடவேண்டும், 'அவளது' குரலை ஒருமுறையாவது கேட்டுவிடவேண்டும், 'அவள்' வானில் அழகாகத் தவழ்ந்து செல்வதை ஒருமுறையாவது பார்த்துவிடவேண்டும். ஆம், அவள் என்பது கொன்கோட் விமானத்தைத்தான். இப்படிக் கூறிக்கொண்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இனிய மாலைவேளைகளில் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தின் அருகிலுள்ள ஹற்றன் குறஸ் பேருந்து நிலையத்தில் கூடியவர் தொகையோ நூறுக்கும் அதிகம்.

வேகத்தில் 'அவள்' ஒலியையும் மிஞ்சியதால் சுப்பர்சோனிக் என அழைக்கப்பட்டாள். 'அவள்' பூமியில் முதன்முதலில் ஜனனித்தபோது பெரும் சர்ச்சையே உருவானது. இன்று உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படும் கொன்கோட் விமானம் அன்று உருவாக்கப்பட்டபோது, அதை விமான சேவையில் ஈடுபடுத்தமுடியுமா? என்ற கேள்வியே அனைவரின் மனங்களிலும் எழுந்தது.

உலகின் அதிவேகப் பயணிகள் விமானத்தைத் தயாரிப்பதற்காக, 1962ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு அரசுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாளிலிருந்தே பெரும் சர்ச்சைகள் உருவாகிவிட்டன. கொன்கோட் விமானத்தை உருவாக்குவதற்காகும் பெரும் பணச் செலவுகளினாலும், ஒலியை விட அதிகவேகத்தில் பறக்கும் பயணிகள் விமானத்தை அவசியம் உருவாக்கத்தான் வேண்டுமா? என விமர்சகர்களிடையே எழுந்த கண்டனக் குரல்களாலும் இவ்விமானம் உருவானதிலிருந்தே பிரச்சினைகளும் ஆரம்பித்துவிட்டன.

கொன்கோட்டை விடப் பெரிதாகவும் வேகமானதாகவும் ஒரு சுப்பர்சோனிக் விமானத்தைத் தாம் தயாரிக்கத் திட்டமிட்டிருப்பதாக 1963இல், அமெரிக்கர்கள் அறிவித்தவுடன, கொன்கோட்டைத் தயாரிக்கும் திட்டம் மேலும் உத்வேகம அடைந்தது.

இராணுவப் போர் விமானங்களின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தைப் புகுத்தியதன் மூலம், மேலும் சில வருடங்களின் பின்னர், 1969 மார்ச் 2 இல் உருவான கொன்கோட் விமானத்தின் முன்னோடி என்று சொல்லக்கூடிய 'கொன்கோட் 001' என்ற மாதிரி விமானம் தனது 29 நிமிடப் பரிசோதனைப் பறப்புக்குத் தயாராக இருந்தது. நூற்றுக்கணக்கான தொலைக்காட்சி வர்ணனையாளர்களும் பத்திரிகையாளர்களும் அங்கே குழுமியிருக்கின்றார்கள். தீயணைப்புப் படையினரும் மீட்புப் பணியாளர்களும் விபத்து ஏற்படின் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றார்கள். 'கொன்கோட் 001' மாதிரி விமானம் பேரொலியுடன் விண்ணில் எழுந்து செல்கிறது. 'அவள் பறக்கின்றாள், பறக்கின்றாள், பறந்து கொண்டே இருக்கின்றாள்' இது பிரிட்டிஷ் ஒலிபரப்பாளர் ரேமண்ட் பக்ஸ்ரறின் வர்ணனை. இப்பரிசோதனைப் பறப்பின் மகத்தான வெற்றியின் பின்னர், 1969 ஒக்ரோபர் 1இல், கொன்கோட் விமானம் ஒலியின் வேகத்தையும் மிஞ்சித் தனது உச்ச வேகமான 2.2 மடங்கு ஒலி வேகத்தில், அதாவது மணிக்கு 1,325 மைல் வேகத்தில் வெற்றிகரமாகப் பறந்து தனது சக்தியை உலகுக்கு எடுத்துக்காட்டியது.

உண்மையான கடினவேலைகள் அப்போதுதான் ஆரம்பமாகியிருந்தன. ஒலியை மிஞ்சும் வேகத்தில் பயணிகள் விமானம் தயாரிக்கும் தனது திட்டத்தைப் பெரும்தொகை பணம் செலவாகுமென்பதால், அந்நேரத்தில் அமெரிக்கா கைவிட்டிருந்தது. ஆனால், தமது முயற்சியில் சற்றும் தளராத பிரான்ஸூம் பிரிட்டனும் இறுதித் தயாரிப்பிற்கு முன்னைய மாதிரிகளையும் விமானவடிவமைப்புக்களையும் உருவாக்குவதில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தன. இறுதியாக அவ்விருநாடுகளும் தமது முயற்சியில் வெற்றியுமடைந்தன. கொன்கோட்டைப் பிரபலப்படுத்தும் நோக்கில், 1972 இல், மத்திய கிழக்கு, தூரகிழக்கு மற்றும் அவுஸ்திரேலியாவுக்குமான தனது முப்பது நாள் கடல்கடந்த பிரயாணத்தைக் 'கொன்கோட்'002 மாதிரி விமானம் ஆரம்பித்தது. அவ்வேளையில் அதில் பயணம் செய்த ஈரானிய மன்னர், கொன்கோட்டில் பிரயாணம் செய்வது மிகவும் இதமாகவும் சொகுசாகவும் இருப்பதாகக் குறிப்பிட்டு, தனது நாட்டு விமானசேவையில் கொன்கோட் விமானத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற தனது ஆவலையும் வெளிப்படுத்தினார். இதைப்போன்ற ஒருவார்த்தை, மிகவும் பிரபலமான ஒருவரின் வாயிலிருந்து உதிர்வதைத்தான் பிரான்ஸூம் பிரிட்டனும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தன. ஏனெனில் இதன் மூலம், கொன்கோட் விமானத்தை உலகெங்கும் பிரபலப்படுத்த முடியுமல்லவா! ஆனால், அவ்விரு நாடுகளினதும் எதிர்பார்ப்பில் மண் விழுந்தது. எரிபொருள் பிரச்சினைகளால் கொன்கோட் விமானத்தை இயக்குவது அதிக செலவு பிடிக்கும் எனவும், இவ்விமானம் எழுப்பும் பேரோசையால் சுற்றுச்சூழல் மாசுபடும் எனவும் கூறி, கொன்கோட் விமானங்களை வாங்குவதற்குக் கேள்விக் கட்டளைகளைச் சமர்ப்பித்திருந்த 16 சர்வதேச விமானசேவை நிறுவனங்கள் 74 விமானங்களுக்கான கட்டளைகளை இரத்துச்செய்தன. ஆனாலும் கொன்கோட்டின் தயாரிப்பாளர்கள் மனம் தளரவில்லை. கொன்கோட் விமானம் என்றோ ஒருநாள் விமான சேவை நிறுவனங்களிடையே பிரபலமடையும் என்ற நம்பிக்கையில், அதன் தயாரிப்பாளர்கள் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தார்கள்.

கொன்கோட் விமானத்தின் சத்தம் மற்றும் இயந்திர வெளியீடு என்பனவற்றில் தேவையான மாறுதல்களைத் திருப்திகரமாகச் செய்தபோது, அவ்விமானத்தை முதன்முதலாகத் தயாரிக்க ஆரம்பித்துப் பதின்மூன்று ஆண்டுகள் கடந்திருந்தன. அன்று, 1976 ஜனவரி 21 ஆம் திகதி, அன்றைய தினத்தில் பிரான்ஸ் தேசத்தின் ரௌலௌஸ் (Toulouse) விமானத் தொழிற்சாலையில், பயணிகள் சேவைக்கென உருவாக்கப்பட்டு, முழுமையடைந்த முதல்தொகுதி கொன்கோட் விமானங்கள், தொழிற்சாலைக்கு வெளியே கொண்டுவரப்பட்டு நிரையாக நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றின கம்பீரமான அழகு, காண்போர் கண்களைப் பறித்தது. அந்நன்நாளை ஆவலோடு எதிர்பார்த்திருந்த பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் விமான சேவை நிறுவனங்கள் அன்றையதினம் பயணிகளுக்கான தமது சேவையை ஒரே நேரத்தில் ஆரம்பித்துவிட்டன. லண்டனிலிருந்து பஹ்ரேனுக்கு பிரிட்டிஷ் 'ஏர்வேஸ்' தனது சேவையை நடத்தியது. அதேவேளை, பாரிஸிலிருந்து றியோ டி ஜெனீரோ நகருக்கு 'ஏர் பிரான்ஸ்' தனது சேவையை மேற்கொண்டது. 'அவள்' உண்மையிலேயே பேரழகிதான். 'அவளது' அதிஅற்புதமான அழகாலும், 'அவள்' வான வெளியில் பறந்து செல்லுவதைத் தரையிலிருந்து பார்க்கையில் தோன்றும் 'அவளது' அழகான நிழலுருவாலும் அதிவேகமாகப் பறப்பதால்தான் போய்ச் சேரவேண்டிய இடங்களை 'அவள்' விரைவிலேயே சென்றடைந்து விடுவதாலும், கவரப்படும் மக்களால், கொன்கோட் விமானங்கள் தொடர்பான தவறான அபிப்பிராயங்கள் களையப்பட்டு, விரைவிலேயே கொன்கோட் விமானங்கள் மக்கள் மத்தியில் புகழ் பெற்றுவிடுமென எப்போதும் நல்லதையே நினைப்போம் என்பதற்கு இணங்க, பிரான்ஸ் மற்றும் பிரிட்டிஷ் விமான சேவை நிறுவனங்கள் நம்பிக்கொண்டிருந்தன. ஆனால், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தினைக் கடந்து அமெரிக்காவுக்கான விமான சேவையை அவை அறிமுகப்படுத்திய போது, அந்த நம்பிக்கை வீண்போனது. இவ்விமானங்கள் பறக்கும்போது உண்டாகும் இரைச்சலாலும் வெளிவிடும் புகையாலும் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படுவதாகக் கூறிச் சூழல் மாசடைவதிற்கு எதிரான அமைப்பினரின் எதிர்ப்புக்குரல்கள் எங்கும் பலமாக ஒலிக்க ஆரம்பித்தன. உண்மையைச் சொல்வதானால், கொன்கோட் விமானங்களினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் கருத்திற்கொண்டு, கொன்கோட் விமானங்கள் தரையிறங்குவதை உலகின் பிரதான விமானநிலையங்களில் பெரும்பாலனவை தடைசெய்திருந்தன. இறுதியில் காலம் கனிந்தது; வேளைவந்தது. அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்ரன் பெருநகரத்தில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையத்திற்கான தனது சேவையை 1976 மே மாதம் 24 திதியில் தொடங்கும் வாய்ப்புக் கொன்கோட்டிற்குக் கிடைத்தது. பழம் நழுவிப் பாலில் வீழ்ந்தது போல், நியூயோர்க் துறைமுக அதிகார சபை கொன்கோட் விமானம் மீது விதித்திருந்த தடையை நீக்கக்கோரி, அமெரிக்க உயர்நீதிமன்றம் 1977 ஒக்ரோபர் 17 இல் தீர்ப்பளித்தது. லண்டன் மற்றும் நியூயோர்க் மாநகரங்களுக்கிடையிலான தினசரி வர்த்தக விமானசேவையைத் தொடங்குவதற்கு அந்த நீதிமன்றத் தீர்ப்பு வழி வகுத்துக்கொடுத்தது.



ஆனாலும் 'அவளது' வாழ்வில் சோதனைகள் தொடர்ந்த வண்ணமேயிருந்தன. 'பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு அரசுகள் எதிர்பார்ப்பதுபோல், கொன்கோட் விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்துவதால் பெருமளவில் இலாபம் அடையமுடியாது' என்று ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் கொன்கோட் விமானங்களுக்கெதிராக விமர்சகர்கள் கூறிய கருத்துக்கள் கடைசியில் பலித்தேவிட்டன. எதிர்பார்த்த இலாபம் கிடைக்காததால் 16 ஆவது கொன்கோட் விமானத்தின் உருவாக்கத்துடன், கொன்கோட் விமானங்களின் தயாரிப்பை முற்றுமுழுதாக நிறுத்தும் துரதிர்ஷ்டநிலைக்குப் பிரஞ்சு, பிரிட்டிஷ் அரசுகள் தள்ளப்பட்டன. தன்னை உருவாக்கியவர்களின் பொருள்வளத்தைப் பெருக்குவதில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொன்கோட் விமானத்தின் சாதனைப் பட்டியல்

- ஒலியின் வேகத்தைப் போல் இரண்டு மடங்கு வேகத்தில் (Mach 2) அதாவது, மணிக்கு ஏறக்குறை 1,350 மைல் வேகத்தில் பறந்தது.
- சரியான நிபந்தனைகளின்கீழ் நூறு பயணிகளையும் ஒன்பது விமானச் சிப்பந்திகளையும் சுமந்து கொண்டு 4 ஆயிரத்து 500 மைல்கள் தூரத்திற்குச் செல்லும் திறன் வாய்ந்தது.
- ஆகக் கூடுதலாக 60 ஆயிரம் அடிகள் உயரத்தில் பறந்துள்ளது.
- காவிச் செல்லக்கூடிய பொதிகளின் நிறையில் சிறிது குறைக்கப்பட்ட நிலையில், லண்டனுக்கும் மேற்கிந்தியத் தீவுகளின் பார்படோஸிற்குமிடைப்பட்ட 4 ஆயிரத்து 250 மைல்கள் பயணத் தூரத்தை மிக இலகுவாகப் பறந்து கடந்தது.
- சப்சோனிக் எனப்படும் ஒலியை விடக் குறைவான வேகத்தில் பறக்கும் சாதாரண பயணிகள் விமானங்கள் லண்டனிற்கும் நியூயோர்க்கிற்குமிடைப்பட்ட தூரத்தை 7முதல் 8 மணித்தியாலங்களில் பறந்து கடக்கும். இதே தூரத்தைக் கொன்கோட் விமானம் சுமார் மூன்றரை மணித்தியாலங்களில் கடந்துவிடும்.
- பயணிகள் விமானமொன்று அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்த மிகக்குறைந்த நேரம் 2 மணி 52 நிமிடங்கள் 59 செக்கன்களாகும். 1996 பெப்ரவரி 7 இல், நியூயோர்க்கிலிருந்து லண்டனுக்குப் பறந்து சென்ற விமானத்தைச் செலுத்திய கப்டன் லெஸ்லிஸ்கொட் மற்றும் அவரது சகசிப்பந்திகளாலும் இச்சாதனை நிலைநாட்டப்பட்டது.

## கொன்கோட் விமானத்தின் சரித்திரத்தில்.........

| | |
|---|---|
| 1969 - | முதலாவது பரிசோதனைப் பறப்பு |
| 1969 - | ஒலியின் வேகத் தடையையும் தாண்டி அதிவேகத்தில் பறந்தது. |
| 1971 - | கண்டங்களுக்கிடையிலான விமான சேவையில் முதன்முதலாக ஈடுபட்டது. |
| 1976 - | வர்த்தக விமான சேவையில் முதன்முதலாக ஈடுபட்டது. |
| 1979 - | அமெரிக்காவுக்கான சீரான விமான சேவையை முதன்முதலாக ஆரம்பித்தது. |
| 2000 - | பிரான்ஸின் சாள்ஸ்டி கோல் விமான நிலையத்தில் விபத்திற்குள்ளானது. |
| 2001 - | மீண்டும் பயணிகள் விமான சேவையைத் தொடர்ந்தது. |
| 2003 - | விமான சேவையிலிருந்து விடைபெற்றது. |

## சரித்திரத்தில் சாதனைபடைத்த கொன்கோட் விமானத்தின் பாகங்கள் ஏலத்தில் விடப்படும்.

தான் அப்போது அணிந்திருந்த விமானிக்குரிய அங்கி, பின்னாளில் உயர்ந்த பொருளாகப் போற்றப்படுமென்று, 1969 ஏப்ரல் 9 இல், கொன்கோட் விமானத்தைச் செலுத்திய விமானி பிரையன் ட்றப்ஷோ அறிந்திருக்கவில்லை. இப்போது 34 வருடங்கள் கடந்துவிட்டன. கொன்கோட் சரித்திரத்தில் இடம்பிடித்துவிட்டது. சுப்பர்சோனிக் பயணிகள் விமானமான கொன்கோட்டின் பாகங்களை ஞாபகச்சின்னங்களாக வாங்குவதற்கு அனைவரும் போட்டியிடுகின்றார்கள். பாரிஸிலுள்ள கிறிஸ்டீஸ் ஏலவிற்பனை நிலையத்தில் கொன்கோட்டின் பாகங்களை ஏலத்தில் விடுவதற்கு ஏர்பிரான்ஸ் தீர்மானித்துள்ளது. மேலும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் கொன்கோட்டை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

முதன்முதலாகக் கொன்கோட் விமானத்தைச் செலுத்திய விமானி பிரையன் ட்றப்ஷோ அணிந்திருந்த விமானிக்குரிய அங்கியும் தலைக்கவசமும் விசேட விற்பனை முகவர்கள் மூலமாக இந்த நவம்பர் மாதத்தில் 'ஒன்லைனில்' ஏலத்திற்கு வருகின்றன.


கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்ட மிக அழகிய ஆகாய விமானமாகக் கொன்கோட் கருதப்பட்டதாலும், அதில் பிரயாணம் செய்வதற்குப் பலர் ஆவலாகவிருந்ததாலும் கொன்கோட் தொடர்பான ஞாபகார்த்தப் பொருள்களை வாங்கும் ஆர்வம் அதிகரித்திருப்பதாக அதுதொடர்பான சேகரிப்புக்குப் பொறுப்பான லிசா பெரிரஸ் தெரிவித்தார். கொன்கோட், உயர்ந்த இடத்தில் வைத்துப்போற்றப்படுகின்றது. அது தனித்துவமானது. எனவே, அதன் பாகங்களை ஞாபகச்சின்னங்களாகப் பேணிக்காப்பதற்குப் பலர் ஆர்வமுடனிருக்கின்றனர்.






கறுப்புப்பெட்டியின் தகவல் பதிவுசெய்யும் கருவி, கடினமான மரத்தினால் நுட்பமான முறையில் செதுக்கப்பட்ட கொன்கோட் இயந்திரத்தின் பாதியளவான மாதிரிக் கொன்கோட் விமான இயந்திரம் என்பன விற்பனைக்கு வருகின்றன. மேலும் கொன்கோட் விமானம் முதன்முதலில் பரிசோதனைப் பறப்புக்களை மேற்கொண்ட நாள்களில் பயன்பட்ட சக்கரங்கள், விமானியின் இருப்பிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கருவிகள், பழுதுபார்த்தல் தொடர்பான கையேடுகள் மற்றும் விமான இறக்கையின் பாகங்கள் என்பனவும் விற்பனைக்கு விடப்படும்.

**தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2003**
**மாதிரி வினாத்தாள் இல-03**
**வினாத்தாள்-I நேரம் : 45 நிமிடங்கள்**

● **1-3 வரையுள்ள வினாக்களில் முதலில் தரப்பட்ட படத்தோடு அல்லது பொருளோடு மிக நெருங்கிய தொடர்புடைய படத்தை ஏனைய மூன்று படங்களிலும் இருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

01. 
1 2 3 (............)

02. 
1 2 3 (............)

03. 
1 2 3 (............)


● **4-6 வரையுள்ள வினாக்களில் புள்ளிக் கோட்டை நிரப்புவதற் குரிய சொல்லை அதன் கீழ்த்தரப்பட்ட நான்கு சொற்களி லும் இருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


04. நாம் தேவையான பொருட்களை .................... வாங்குகின்றோம்.
(1) வீதியில் (2) தோட்டத்தில்
(3) ஊரில் (4) கடையில் (............)

05. மழை, வெயில் என்பவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்ற ........................ உபயோகிக்கின்றோம்.
(1) தொப்பி (2) குடை
(3) பொலித்தீன் (4) செருப்பு (............)

06. எக்கருமத்தையும் மனத்துணிவுடன் முயன்று செய்தால் ...................... அடைவோம்.
(1) களைப்பு (2) முயற்சி (3) புகழ்ச்சி (4) வெற்றி (............)

● **7-8 வரையுள்ள வினாக்களில் 'அ' பகுதியில் உள்ள உரு வங்களின் தொடர்புகளுக்கு ஏற்ப 'ஆ' பகுதியின் வெற்றிடத் திற்குப் பொருத்தமான தொடர்புடைய உருவத்தைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

07. 
அ ஆ 1 2 3
(............)

08. 
அ ஆ 1 2 3
(............)


● **9-11 வரையிலான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

09. பழங்களை சாப்பிடுவதற்கு முன்னர் கழுவிச் சாப்பிட வேண்டும் காரணம்?
(1) பழங்கள் அழகாகவும் இனிமையாகவும் இருக்கும் என்பதால்.
(2) நோய்க்கிருமிகள், அழுக்குகள் இருக்கும் என்பதால்.
(3) சாப்பிடுவதில் நாம் சுத்தமானவர்கள் என்பதைக் காட்ட. (............)

10. பகலில் நட்சத்திரங்கள் தெரிவதில்லை காரணம்?
(1) பகலில் வேறு இடத்திற்குச் சென்று விடும்.
(2) நட்சத்திரங்கள் பகலில் ஒளி இழந்து விடும்.
(3) சூரியனின் பிரகாசமான ஒளி அதனை மறைத்துவிடும். (............)

11. விறகு அடுப்புக்களில் சமைப்பது குறைந்துள்ளது. காரணம்?
(1) காட்டில் விறகு வெட்டுவதற்கு மிதிவெடிகள் தடையாகவுள்ளமை.
(2) விறகுத் தட்டுப்பாடு என்பதால்.
(3) விறகுப் புகையால் வீடு அசுத்தமாகும் என்பதால். (............)

● கீழே மூன்று மாணவர்களின் விருப்புப் பாடங்கள் தரப்பட்டுள் ளன. அதனை அவதானித்துப் புள்ளிக்கோட்டில் சரியான விடையை எழுதுக.





| | | |
|---|---|---|
| T | - | தமிழ் |
| S | - | விஞ்ஞானம் |
| M | - | கணிதம் |
| E | - | ஆங்கிலம் |
| P | - | உடற்கல்வி |
| A | - | ஆக்கம் |
| B | - | அழகியல் |
| C | - | சுற்றாடல் |


12. மூவரும் விரும்பும் பாடம்/பாடங்கள் எது/எவை?..........................
13. நிருத்திகாவும் நிவேதிகாவும் மட்டும் விரும்பும் பாடம் எது? ..................................
14. சர்வதேச மொழியாக விளங்கும் பாடத்தை யார் விரும்புகின்றார்? ..................................
15. சுருதிகா விரும்பும் பாடங்கள் எத்தனை?..........................

● **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


16. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே தரப்பட்டுள்ளன. இதில் 'க' என்ற எழுத்துள்ள பக்கத்திற்கு எதிரான பக்கத்தில் உள்ள எழுத்து யாது?





(1) ப
(2) ம
(3) வ
(4)ச

17. 



தரப்பட்ட சமநிலையில் உள்ள தராசின்படி எத்தனை வித்துக் கள் ஒரு மாம்பழத்திற்குச் சமனாகும்?
(1) 4 (2) 8 (3) 12 (4) 16

18. 



நிரோசனிடம் 50ml நீர் கொண்ட முகவை இருந்தது. அவன் முகவையில் 75ml நீரைச் சேர்த்து பின்பு 50ml வெளியே எடுத்தான். அதன் பின் மீண்டும் 150ml நீரைச் சேர்த்தான். தற்போது முகவையிலுள்ள நீரின் அளவைக் காட்டும் படம் எது?



(1) (2) (3) (4)

19. 

தரப்பட்ட திண்ம வடிவம் மரக்கட்டை களால் ஆக்கப்பட்டது. சகல கட்டை களும் ஒரே அளவினதாகும். இதன்படி இதில் எத்தனை மரக்கட்டைகள் பயன் படுத்தப்பட்டுள்ளன?
(1) 5 (2) 6
(3) 10 (4) 11

20. 


இங்கே அருகில் நான்கு மரக்கட்டை கள் தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொரு துண்டும் அதற்குக் கீழே உள்ள துண்டின் நிறையின் அரைவாசியாகும். துண்டு 4இன் நிறை 3800g எனின் துண்டு 1இன் நிறை யாது?
(1) 950g (2) 425g
(3) 1900g (4) 475g

● **கீழ்வரும் வினாக்களில் "அ" பகுதியும் "ஆ" பகுதியும் ஒரே மாதிரி எனின் "ஆம்" எனவும் வேறுபட்டிருப்பின் "இல்லை" எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

| | (அ) | (ஆ) | |
|---|---|---|---|
| 21. | AAABBCBAABCDA | AAABBCABAABDA | (..............) |
| 22. | 12233344421 | 12233344221 | (..............) |
| 23. | xxvxxvxxvxxx | xxvxvxxvxxx | (..............) |

● **கீழ்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழி ஒவ்வொன்றி னதும் கருத்தைத் தருகின்ற மிகப் பொருத்தமான கூற்றின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

24. ஆழமறியாமல் காலை விடாதே.
1. ஆழமான இடங்களில் காலை விட்டால் அபாயம்.
2. எவரையும் ஆளைத் தெரியாமல் நம்பக் கூடாது.
3. ஒன்றின் இயல்பை அறியாது அதில் பிரவேசிக்கக்கூடாது.

25. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
1. யாருக்கும் அளவுக்கு மேல் உதவக்கூடாது.
2. அளவு அறியாமல் உதவி செய்தால் கஷ்டப்படவேண்டும்.
3. வீண்செலவு செய்யினும் அச்செலவின் கணக்கை அறிந்தி ருத்தல் நல்லது.

● **26-30 வரையுள்ள வினாக்களின் அறிவுறுத்தல்களை நன்கு கிரகித்து அதற்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

26. Aயிலும் பார்க்க B நிறை கூடியவர். Aயும் Cயும் சம நிறை உள்ளவர்கள். Cஇலும் பார்க்க D நிறை குறைந்தவர். இங்கு நிறை கூடியவர் யார்?
(1) A (2) B (3) C (4) D

27. L,M,N,O,P ஆகியோர் வரிசையாக நிற்கின்றனர். Nஇற்குப் பின்னால் M நிற்கின்றார். Nஇற்கு முன்னால் O நிற்கின்றார். Pயிற்குப் பின்னால் Lஉம், Lஇற்குப் பின்னால் Oவும் நிற் கின்றனர் நடுவில் நிற்பவர் யார்?
(1) L (2) O (3) M (4) N

28. நிருசனின் தொலைபேசி எண் ஐந்து இலக்கங்களைக் கொண் டது. இரண்டாம் இலக்கமும் கடைசி இலக்கமும் ஒற்றை எண்களாகும். முதலாம் இலக்கமும் மூன்றாம் இலக்கமும் இரட்டை எண்களாகும். நான்காம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தி லும் 5 குறைவாகும். அவனுடைய தொலைபேசி எண் பின்வரு வனவற்றில் எது?
(1) 43169 (2) 73165 (3) 43617 (4) 46387

29. நேற்றைக்கு முந்திய தினம் புதன்கிழமையாயின் நாளைக்கு அடுத்த நாள் என்னவாயிருக்கும்?
(1) வெள்ளிக்கிழமை (2) சனி
(3) ஞாயிறு (4) வியாழன்

30. "இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும்" அது என்ன?
(1) கண் (2) மணிக்கூடு 3) வ


● 31-33 சரியான விடையின் கீழ்க்


31. சூரியன் எப்பொழுதும் கிழக்
(1) உண்மை (2) பொய் 3) சு

32. நாம் உயிர் வாழ்வதற்கு ர வ எனினும் வளி இல்லாவிடி உ
(1) உண்மை (2) பொய் 3) சு

33. இன்று வானத்திலே சந்திரன் இன்று பௌர்ணமி தினமா.
(1) உண்மை (2) பொய் 3) சு

● **34-37 வரையான வினாக்கல் த களைக் கண்டுபிடித்து கற் வேண்டிய பொருத்தமான**

34. 


35. 


36. 19, 25, 32, 40, ....................
37. 1, 3, 7, 13, ....................

● கீழ்க் காணும் வாக்கியத் தொட புத்திக் குறைவைக் காண்பிக்கும் அவற்றைக் கண்டு பிடித்து

38. மழை இன்றிப் பயிர்கள் வாடினால் வேண்டும்.
39. சிங்கம் ஒரு தாவரபட்சணி ஆகை கிறது.
40. களியாட்டு விழாவில் மெல்லின் சிறந்த கண்காட்சியா ம.

## வினாத்தா

● கீழ்வரும் பாடலை வாசித்து வரையுள்ள வினாக்களுக்கு கோட்டின் மீது எழுதுக.

வெள்ளைக் கொக்கு
மீனைக் கொத்தி
துள்ளித் துள்ளி மீ
தூரப் பாய்ந்து
எல்லையற்ற கோபத்
இன்னும் கொக்கு
கல்லில் துள்ளி வி
கௌவிக் கொண்

01. பாடலில் கோபம் அடைந்தவர் ய
02. எங்கு விழுந்த மீனைக் காக்கு
03. பாடலில் உள்ள எழுவாய் அ சொல் ஒன்று எழுதுக......................

● பாடலில் உள்ள

04. பெயர்ச்சொல் இரண்டு எழுதுக.
05. வினை எச்சங்கள் இரண்டு எழு
06. பெயரெச்சசொல் ஒன்று எழுதுக.
07. அடுக்கு மொழிச்சொல்லை எழு

● ஒத்த கருத்துள்ள சொல் எழு

8. கோபம் :..........................
9. தூரம் :..........................

● எதிர்க்கருத்துள்ள சொல் எழு


10. வெள்ளை :..........................
11. போனது :..........................

12. "பறந்தது" என்பதை நிகழ்கால
13. "மீனைக் கொத்திப் பார்த்தது" என் எழுதுக. ..........................
14. மீனின் இளமைப் பெயர் யாது?
15. பாடலில் உள்ள அஃறிணை பட (கொக்கு, மீன், பார்த்தது, பாய்

● கீழே இலங்கையிலுள்ள மதத்த மான நூல்களும், அவர்களா விழாக்களும் ஒழுங்கின்றித் த

| | | |
|---|---|---|
| மதத்தவர்கள் | - | இந்துக்கள், பெ கிறிஸ்தவர்கள் |
| நூல்கள் | - | திரிபீடகம், தி வேதசிவாகமம். |
| விழாக்கள் | - | நத்தார், தீபாவ நவராத்திரி, பெ |

டு (3) வானொலி (4) நாய்
யின் கீழ்க் கோடிடுக.
கிழக்குத் திசையில் உதிக்கும்.
ப் (3) கூறமுடியாது
ற்கு நீர், வளி, உணவு மிக அவசியம்
ாவிடினும் உயிர் வாழலாம்.
ப் (3) கூறமுடியாது
ந்திரனின் தோற்றம் தெரிந்தது. எனவே
னமாகும்.
ப் (3) கூறமுடியாது
ாக்களில் தரப்பட்டுள்ள எண் தொடர்பு
து அதற்கேற்ப வெற்றிடத்தில் வர
ான எண்ணை எழுதுக.




................

................

பத் தொடரில் நகைப்புக்குரிய அல்லது
ண்பிக்கும் சொற்கள் அமைந்துள்ளன.
டித்துக் கோடிடுக.
வாடினால் அதிக உரம் உபயோகிக்க

ணி ஆகையால் மிகத் தைரியமாயிருக்

மெல்லிசைக் குழுவினரின் இசையே

## ...னாத்தாள்-2

1மணி 15 நிமிடங்கள்

ாசித்து அதனைப் பயன்படுத்தி 1-15
களுக்குரிய விடைகளைப் புள்ளிக்
துக.

க் கொக்கு ஒன்று வந்து
க் கொத்திப் பார்த்தது
ுள்ளி மீனும் ஓடித்
பாய்ந்து போனது
ற கோபத்தோடு
ம் கொக்கு முயன்றது
ள்ளி விழுந்த மீனைக்
க் கொண்டு பறந்தது.

...நதவர் யார்?...........................
...கொக்கு ...ளவியது?....................
...ாய் அடைமொழி/பெயர் அடைமொழிச்
..........................................

எழுதுக. ..........................
ண்டு எழுதுக..........................
எழுதுக. ..........................
லை எழுதுக. ..........................

ால் எழுதுக.
..................
..................

ால் எழுதுக.
..................
..................

ழ்கால வடிவத்தில் எழுதுக. ..............
து" என்பதனை பன்மை வாக்கியமாக
..........................................
யாது?..........................................
ன படர்க்கை வினைச்சொல்...............
து, பாய்ந்து, துள்ளி)

மதத்தவர்களும், அவர்களின் புனித
வர்களால் கொண்டாடப்படும் சமய
றித் தரப்படுகின்றன.
கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள்,
வர்கள்.
ம், திருக்குர்ஆன், பைபிள்,
வாகமம்.
தீபாவளி, வெசாக், ரம்ழான்,
திரி, பொசன், ஈஸ்டர், ஹஜ்.

- மேலே தரப்பட்ட விவரங்களை அவர்களுக்குரிய வழிபாட்டுத் தலங்களின் கீழே "அ" பகுதியில் மதத்தவர்களையும் "ஆ" பகுதியில் நூல்களையும் "இ" பகுதியில் விழாக்களையும் ஒழுங்குமுறையில் எழுதுக.

16.




(அ) ..........................
(ஆ) ..........................
(இ) 1. ..........................
2. ..........................

17.




(அ) ..........................
(ஆ) ..........................
(இ) 1. ..........................
2. ..........................

18.



(அ) ..........................
(ஆ) ..........................
(இ) 1. ..........................
2. ..........................

19.



(அ) ..........................
(ஆ) ..........................
(இ) 1. ..........................
2. ..........................


- பெருந்தெருக்களிலே காணப்படக்கூடிய வீதிச் சைகைகள் நான்கு கீழே தரப்பட்டுள்ளன. இவை வெளிப்படுத்தும் அறிவுறுத்தலை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

20.



..........................

21.



..........................

22.



..........................

23.



..........................

- பின்வரும் விடைகளைப் பயன்படுத்தி அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக


**தாளவாத்தியங்கள், பாட்டு வாத்தியங்கள், கிராமியப்பாடல்கள், பல்லியம், வாத்திய இசை**

24. கிராமிய வாழ்வை விளக்கும் பாடல்கள்..........................
25. மிருதங்கம், தபேலா, உடுக்கு..........................
26. புல்லாங்குழல், ஆர்மோனியம், வயலின்..........................
27. பல வாத்தியங்களை இணைத்து வாசித்தல்..........................
28. இசைககருவ்களால இசைககபபடுவது..........................

- கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடைப்புக்குள் எழுதுக.

29. வலைப்பந்தாட்டம் ஒரு கிராமிய விளையாட்டாகும். ( )
30. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும். ( )
31. சிறு விளையாட்டுக்கள் மாணவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். ( )
32. கிளியொன்றின் மாதிரி உருவத்தைச் செய்வதற்கு மிகவும் பொருத்தமான மூலப்பொருளாக குருத்தோலையைப் பயன்படுத்தலாம். ( )
33. பயம், கோபம், விருப்பு, வெறுப்பு, சந்தோசம், போன்ற உணர்வுகளை முகபாவனை மூலம் வெளிப்படுத்த முடியாது. ( )
34. "கும்மி நடனம்" கிராமிய நடனங்களில் ஒன்றாகும். ( )
35. தையல் பழகுவதற்கு இலகுவான ஊடகம், கடதாசி ஆகும். ( )
36. இயற்கை உலகில் காணமுடியாத, மனதில் கற்பனை செய்து கொள்ளக்கூடிய சித்திர ஆக்கம் உண்மைச் சித்திர ஆக்கமாகும். ( )
37. அகலக் கோடுகள், முறிகோடுகள், இரேகை என்னும் சொற்பதங்கள் தையல் பாடத்துடன் சம்பந்தப்பட்டன. ( )
38. கடதாசிப் பூ அலங்கார ஆக்கத்திற்கு கடதாசி, கம்பி, ஈர்க்கு போன்றன தேவைப்படும். ( )

- கீழே, ஒவ்வொரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் காட்டப்பட்டுள்ளது. வரிப்படத்தைப்பார்த்து வினாக்களுக்கு விடைகள் எழுதுங்கள்.




39. அம்பாந்தோட்டையில் இருந்து காலியின் ஊடாக கொழும்பிற்கு உள்ள தூரம் யாது? ....................km
40. அம்பாந்தோட்டையில் இருந்து காலி, கொழும்பின் ஊடாக இரத்தினபுரிக்கு உள்ள தூரம் யாது? ....................km
41. அம்பாந்தோட்டையில் இருந்து இரத்தினபுரி ஊடாக கொழும்பிற்கு உள்ள தூரம் யாது? ....................km

- கீழுள்ளவற்றின் நிலைகளை அவதானித்து வெற்றிடங்களை நிரப்புக.

| | | |
|---|---|---|
| மாட்டுவண்டி | மரம் | கிணறு |
| கடை | | பசு |
| கார் | வீடு | சைக்கிள் |

42. மாட்டுவண்டி சைக்கிளுக்கு..................திசையில் உள்ளது.
43. கடை....................இற்கு மேற்குத்திசையில் உள்ளது.
44. கிணறு மரத்திற்கு................திசையில் அமைந்து உள்ளது.
45. கார் சைக்கிளுக்கு..................................திசையில் உள்ளது.
46. சைக்கிள் கிணற்றுக்கு..........................திசையில் உள்ளது.
47. ................மரத்திற்குத் தெற்குத் திசையில் அமைந்துள்ளது.

★பின்வரும் பூச்சிகளின் பெயர்களை எழுதுக.



..................... 48.



..................... 49.



..................... 50.


- கீழே உள்ள தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.

51. பூக்கள் - .......................... 53. கிராமம் - ..........................
52. குடை - .......................... 54. தோட்டம் - ..........................

- கீழே உள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

55. TREES- .......................... 56. ZOO - ..........................
57. NIGHT- .......................... 58. BUTTERFLY -..........................

- சரியான விடையை எழுதுக.



59. இந்த அமைப்பு எதனைக் குறிக்கிறது?
..........................
60. எதன் மூலம் சில்லு சுழலும்?
..........................
61. இதன் மூலம் எதனை உற்பத்தி செய்யலாம்?
..........................
62. சில்லுச் சுழலும் வேகத்தைக் கூட்ட யாது செய்யலாம்?
..........................

- சரியான விடையின் கீழக் கீறிடுக.

63. மின்னைக் கடத்துவது (அலுமினியம், இறப்பர், கண்ணாடி)
64. ஆணி வேர்த் தாவரம் (நெல், வேம்பு, தென்னை)
65. நீரில் வேகமாகக் கரைவது (உப்பு, சர்க்கரை, யூரியா)
66. காந்தம் கவராத பொருள் (குண்டுசி, இரும்புத்தூள், இறப்பர்)
67. ஒளியைப் புகவிடும் பொருள் (மரம், கண்ணாடி, புத்தகம்)

- சரியான விடையை எழுதுக.

68. 29ஐ உரோமன் எண்ணில் எழுதுக. ..........................
69. 0.7,0.5,1.3,0.25 இவற்றை இறங்குவரிசைப்படுத்துக. ..........................
70.  நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னம்? ..........................
71. வட்டவடிவமான வெள்ளி நிறமல்லாத இலங்கை நாணயம் எது? ..........................
72. உச்சிகளும், விளிம்புகளும் இல்லாத திண்ம உரு எது?
..........................

- வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபோது....... என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
- ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.


73. ..........................................................
..........................................................
74. ..........................................................
..........................................................
75. ..........................................................
..........................................................
76. ..........................................................
..........................................................
77. ..........................................................
..........................................................
78. ..........................................................
..........................................................

தயாரிப்பு : ஆசிரியர் திரு.வேலும்பிள்ளை அன்பழகன்.

# செல்வா எலற்றிக்கல்ஸ்

* தரமான மின்சார உபகரணங்கள்,
* மின் அலங்காரப் பொருள்கள்,
* P.V.C. குழாய்கள்,
* பொருத்திகள், மின் மோட்டார்

போன்ற பொருள்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:



**செல்வா எலற்றிக்கல்ஸ்**
இல. 68, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(21-25-19-15) (24197)


## கருவாடு விலையில் வீழ்ச்சி

நெடுந்தீவில் கட்டாப்பாரை கருவாடு விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்சமயம் இந்தவகை மீன் இனங்கள் கூடுதலாகப் பிடிக்கப்படுவதனாலேயே விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. தற்சமயம் ஒருகிலோ கருவாடு ரூபா நூறாக விற்பனை செய்யப்படுகினறது. இதற்கு முன்னர் ஒரு கிலோ கருவாடு ரூபா 175முதல் 250வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.(எ-111)

## கல்வியியற் கல்லூரி ஆசிரியர் செயலமர்வு

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான மாதாந்த செயலமர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் சம்பளப் பணத்துக்கான காசோலைகளும் வழங்கப்படவுள்ளதாக பீடாதிபதி அறிவித்துள்ளார். (எ-10)

## கசிப்பு உற்பத்தி வழக்கில் ரூ.ஒரு லட்சம் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

கசிப்பு உற்பத்தியில், ஈடுபட்டமை, மற்றும் கோடா வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் ஐவருக்கு யாழ். நீதிமன்றினால் ஒரு லட்சத்து 27 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐந்து சந்தி, நாவாந்துறையைச் சேர்ந்த செல்லத்துரை குமரன் என்பவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டமும், 10ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

கரந்தன், ஊரெழுவைச் சேர்ந்த அருள் தவராசா என்பவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 3ஆயிரம ரூபா தர்மப்பணம் செலுத்துமாறும்-

சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அன்ரன் றெஜினோல்ட், புதிய வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்ணையா சிறிபவளராசா மற்றும் இல. 32 இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த உதயகுமார் மேலிலதா ஆகிய மூவருக்கும் தலா 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா 3ஆயிரம் ரூபா தர்மப்பணம் செலுத்துமாறும் - யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

இதேவேளை - அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்ற இருவருக்கு யாழ். நீதிமன்றினால் 10 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

புதிய வீட்டுத்திட்டம், குருநகரைச் சேர்ந்த அருளப்பு அமலதாஸ், அரசடி வீதி, நல்லூரைச் சேர்ந்த செல்லத்துரை ஆனந்தராசா ஆகிய இருவரையும் தலா 3ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் யாழ். நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ-5)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



அகவை அறுபதைக் கண்டு
ஆசிரியத்துவத்தில்
இன்று (05.11.2003) புதன்கிழமை
சேவை நிறைவு காணும்
நம் வித்தியாலய ஆசிரியை
திருமதி
**கமலாதேவி தம்பிநாதன்**
அவர்கள்

*ஆரம்பக் கல்விப் பயிற்சியை முடித்து*
*சீர்பெற ஆசிரியப் பணியினில் நிறைந்து*
*பேரன்பு பொங்கப் பிள்ளைகள் சூழச்*
*சொல்லிக் கொடுத்தவை சொல்லிலடங்கா*
*ஊரின்பங் கொண்டு உம் சேவை புகழ*
*அறுபத்திலின்று அகவையைக் கண்டீர்*
*சீருண்டு கண்டீர் சிறப்பான உமக்கு - இன்னும்*
*சிவனையே வேண்டினோம் சிறப்பாய் நீ வாழி*

என உளமார வாழ்த்தும்:
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
ஆசிரியர் கழகம்.

(24360) (34-21-15-19)

## நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

முதலாம் ஆண்டு | 12 ஆம் ஆண்டு





**அமரர் சி.இராசையா** | **திருமதி இ.இராசசிறோன்மணி**

| | | |
|---|---|---|
| 06.10.1919 → | தோற்றம் | ← 22.07.1936 |
| 17.11.2002 → | மறைவு | ← 24.07.1991 |

திதி: 05.11.2003

ஆண்டுகள் பல ஓடி மறைந்திட்டாலும்
அப்பாவே! அம்மாவே! அகத்தினில் தெய்வமாய் வாழ்கின்றீர்கள்!!
நீண்டிடும் நினைவுகளை நெஞ்சினில் சுமந்து வாழ்கின்றோம்
நீங்களிருவரும் நிமலனடியில் நீங்காது வாழ வேண்டுகிறோம்!

"அம்பாள் அகம்",
சரசாலை மத்தி,
சாவகச்சேரி.

நெஞ்சம் மறவாத
உங்கள் நினைவுகளுடன்:
உங்கள் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(24379) (34-15-19-21)

## நெஞ்சைவிட்டு அகலாத நினைவலைகள்

25ஆவது ஆண்டு நிறைவில்...

| மண்ணில் | வின்னில் |
|---|---|
| 06 | 15 |
| 08 | 12 |
| 1930 | 1978 |



ஓராண்டு நிறைவில்...

| மண்ணில் | வின்னில் |
|---|---|
| 26 | 16 |
| 04 | 11 |
| 1940 | 2002 |



**அமரர் வ.ச.பொன்னுச்சாமி** **திருமதி பொ. சிவபாக்கியம்**

(உரிமையாளர்கள், பரிமளா ஸ்ரோர்ஸ், V.S.P. Lunch Oil,
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.)

பூரணை (08.12.2003) திதி துவாதசி (05.11.2003)

*ஆண்டுகள் இருபத்தைந்து ஆயிற்றோ? அப்பா நீங்கள் மறைந்து?*
*கள்ளமில்லா வெள்ளை உள்ளமும் கனிவு மிக்க மென் மொழிகளும்*
*புன்னகை மாறா பொன் முகமும் கொண்ட எம்மினிய தெய்வமே!*
*உமக்குத் துணையாய் எம்மருமைத் தாயாரையும் அணைத்துக்*
*கொண்டதன் மாயமென்ன......?*
*நீங்கள் எம்மை விட்டு எங்கு சென்றாலும், எத்தனையாண்டுகள்*
*சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம்மோடுதான்.*

*தந்தையை இழந்து தவித்த எமக்குத் தாயாகித் தந்தையாகி*
*அன்பினால் செயலால் சிந்தையால் எமக்காதரவளித்தீர் அம்மா!*
*மென்மையாய் மலர் போல் நல்ல உள்ளமே கொண்ட அம்மா!*
*எம்மை நீராழவும் வைத்து எவ்விடம்தான் சென்றீரம்மா...?*
*துன்பமது தாங்காது துடிக்கின்றதே எம்மிதயம்!*
*பெற்ற மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தார்தனை*
*விடுத்து நீங்கள் சென்று அதற்குள் ஓராண்டு தான் ஆனதுவோ..?*

"பொன் அகம்",
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(24383) (34-21-15-19)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# தகவல் தொழில்நுட்ப நிலையம் அமைக்க அமெ. பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம்

## அமைச்சர் மிலிந்த விரைவில் கைச்சாத்து

வாஷிங்ரன்,நவ.5

அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைந்து இலங்கையில் தகவல் தொழில்நுட்ப நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் அமைச்சர் மிலிந்த மொறகொட கையெழுத்திடுவார். பிட்ஸ்பேர்க்கில் உள்ள கார்நெஜி மெலோன் பல்கலைக்கழகமே இத்துறையில் இலங்கைக்கு உதவப்போகிறது.

அமெரிக்காவில் கணனி விஞ்ஞானத்துறைகளில் முன்னணியிலுள்ள பல்கலைக்கழகங்களில் கார்நெஜி மெலோன் பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டத்தின்கீழ் பிரஸ்தாப அமெரிக்கப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்விமான்கள், ஆராய்ச்சியாளர்கள், பயிற்சி அளிக்கும் அதிகாரிகள் இலங்கை வருவார்கள். இலங்கையில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிலையம் ஒன்றை உருவாக்குவது குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட கருத்துத் தெரிவிக்கையில்:-

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் எழுத்தறிவு அதிகமாக உள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்று. தகவல் தொழில்நுட்பத்துறையில் நாம் பின்தங்கிவிட்டால் நாம் பின்னிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம் - என்றார்.

# தமிழ்ச் செல்வனின் கருத்துக்கு முஸ்லிம் அமைப்பு வரவேற்பு

யாழ்ப்பாணம்,நவ,5

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து முஸ்லிம் தரப்பினருடன் பேசவேண்டிய தேவையுள்ளது என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருப்பதை வரவேற்று யாழ். மாவட்ட முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு அறிக்கை விடுத்துள்ளது.

அறிக்கையில் அமைப்பின் செயலாளர் எம்.எம்.சபூர் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை திட்டவரைவினை அரசிடம் கையளித்த பின்னர் முஸ்லிம் தரப்பினருடன் பேச்சுக்களில் கலந்துகொள்ளப் போவதாக கிளிநொச்சியில் வைத்து செய்தியாளர்களிடம் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அப்பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம், இடைக்கால நிர்வாக சபையில் அங்கத்துவம் வகிப்பது தொடர்பாகத் தெரிவித்துள்ளார். இதை எமது அமைப்பு மிகவும் மகிழ்ச்சிகரமாக வரவேற்பதுடன் அனைவரும் வரவேற்பர் என்பது உறுதி.

எனவே, விடுதலைப் புலிகள், முஸ்லிம் தரப்பினருடன் காலம் தாழ்த்தாது பேச்சுக்களை ஆரம்பிப்பதுடன் இடைக்கால நிர்வாக சபை பேச்சுக்களில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாகக் கலந்துகொள்வதையும் அச்சபையில் முஸ்லிம்களுடைய அங்கத்துவம் கிடைப்பதையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

# வறிய மாணவர்களின் கல்வி விருத்திக்கு உதவி

சண்டிலிப்பாய்,நவ.5

கனடா நாட்டிலுள்ள சில்லாலை சமூக கலாசார சங்கம், சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அறிவொளி ஒன்றியத்தின் மூலம் சில்லாலைக் கிராமத்திலுள்ள வறிய நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளது.

கல்வியில் ஆர்வமும் ஈடுபாடுமுள்ள வசதியற்ற நிலையிலுள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும் ஏனைய உதவிகளையும் வழங்கி கல்வித்துறையில் அவர்களை ஊக்குவிப்பதற்கு இந்த அமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று இது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டம் விரைவில் செயற்படவுள்ளதாகவும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. (எ-135)

### யாழ். கூட்டுறவுச் சங்கக் கிளைகளில்

# வருமானத்தைப் பெருக்கும் முகாமையாளர்களுக்கு பரிசு

அரியாலை,நவ.5

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் வியாபார நடவடிக்கையில் அதிக மாத வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் கிளை முகாமையாளர்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

சங்கத் தலைவர் சு.சிறில் இத்தகவலைத் தெரிவித்தார்.

சங்கக் கிளைகளில் ரொக்க வியாபார நடவடிக்கைகளைப் பெருக்கி வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் நோக்குடன் கிளை முகாமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சேவையாற்ற வேண்டும். அவ்வாறு சிறந்த முறையில் சேவையாற்றி சங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் கிளை முகாமையாளர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்களுக்கான பரிசுப் பொருள்களை எதிர்வரும் மாவீரர் தினத்தன்று வழங்குவதற்கு சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-17)



வன்னி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் குறைகளையும், தேவைகளையும் கண்டறிந்து அவற்றை நிறைவு செய்யுமுகமாக அதே இடத்தில் சேவை ஒன்று புத்தளம், எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வன்னி புனர்வாழ்வுக்கு துணை புரியும் அமைச்சர் நூர்தீன் மசூர் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம்.

*(படம்: புத்தளம் செய்தியாளர்)*

## செய்திக்கொத்து

### விபத்தில் காயம்!

சங்கானை,நவ.5

சித்தன்கேணிச் சந்திக்கு அருகில் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டர் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-10-29)

### சமுர்த்தி வங்கியில் ரூபா 30 லட்சம் வைப்பு

சங்கானை,நவ.5

வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி வங்கியில் இதுவரை 30 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் பலருக்குச் சுய தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் - அவர் தெரிவித்தார். (எ-10-29)

### அரச அலுவலருக்கு கணனிப்பயிற்சி

குருநகர்,நவ.5

தொழிற்துறைத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் அரச ஊழியர்களுக்கு கணனிப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

தொலைக்கல்வித் திட்டத்தின் கீழ் 3 நாள்கள் இப்பயிற்சி வகுப்பு நடைபெற்றது. (எ-10-51)

### படகுகள் விவரம் பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.5

இந்திய கடற்பரப்பில் வைத்துக் கைப்பற்றப்பட்ட படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றின் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கோயில் வீதியில் அமைந்துள்ள கடற்றொழில் விரிவாக்க அலுவலகத்தில் மேற்படி விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-10-185)

### மருந்தக கூரைத் தகடுகள் சேதம்

கைதடி,நவ.5

கைதடியில் உள்ள அரச மத்திய மருந்தகத்தின் கூரைத் தகடுகள் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வேறு சில பொருள்களும் சேதமாக்கப்பட்டுள்ளதாத் தெரிவிக்கப்படுகிறது. (எ-10-75)

### தென்மராட்சியில் வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

'கியூ மெடிக்கா' நிறுவனத்தினால் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 85 ஆயிரம் ரூபாவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

யுத்த சூழ்நிலையினால் தமது வீடுகளை முற்றாக இழந்தவர்களுக்கே இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன், 300 கிணறுகளும் புனரமைக்கப்படவுள்ளன. (எ-10-185)

### அமைச்சரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,நவ.5

லான்ட் மாஸ்ரர் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குமாறு பெரியவிளான் விவசாயிகள் சம்மேளனம் இந்து கலாசார அமைச்சரை கடிதமூலம் கேட்டுள்ளது. (எ-10-135)

### கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

சங்கானை,நவ.5

கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுவன் ஒருவன் அதற்குள் தவறி வீழ்ந்து மரணமடைந்துள்ளான்.

சங்கானை, பட்டினசபை வீதியைச் சேர்ந்த 'ஜெயக்குமார் தனுஷன் (வயது-8) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான். (எ-10-29)

### உரவகைகள் வந்தன

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்துக்கு உரவகைகள் இம்முறை தாராளமாக எடுத்துவரப்பட்டுள்ளன.

விவசாயிகள் மற்றும் தெங்குச் செய்கையாளர்கள் தமக்குத் தேவையான உரவகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பெரும்பாக அலுவலர் கே.எஸ்.சந்தியேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-10-117)

### வீதி புனரமைப்பு ஆரம்பம்

அரியாலை,நவ.5

கடந்த பலவருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் இருந்த கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-17)

### சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.5

இந்து மாமன்ற ஏற்பாட்டில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சமய தீட்சை பெறவிருப்பவர்களை அன்று காலை 8 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

சமய தீட்சை வழங்கும் மற்றொரு நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது. (ம-8)

## வாசகர் திருமுகம்

### யாழ். நகர வீதிகளின் நிலை என்றைக்கும் மாறாத சாபக்கேடா?

யாழ். நகர தெருக்களின் நிலை யார் கண்களிலும் படவில்லையா? யாழ். நகர் தெருக்கள் வாகனங்களால் நிரம்பி வழிகின்றன. இங்கு வாகனங்கள் ஓடுவதற்கு வீரதீர சாகசச்செயல்கள் செய்ய வேண்டியிருக்கிறதே!

வதி அபிவிருத்தி செய்பவர்களும், செப்பனிடுபவர்களும் எங்கே போய் விட்டார்கள்? கொழும்புக்கு 'யாத்திரை' மேற்கொண்டு வானவீதியில் சஞ்சரிக்கிறார்களா? அதனால் நம் தரையின் வீதிகளின் நிலை கண்களில் படவில்லையா? அல்லது காரியர்லயக் குதிரையை வேகவைத்துக் கொண்டிருக்கிறார்களா? அல்லது A-9 இற்கு ஆரத்தி எடுக்கப்போய் நம் தெருக்களை மறந்துவிட்டார்களா? எவ்வளவு காலமாக யாழ். நகர் தெருக்கள் சீரழிகின்றன?

கொழும்பிலிருந்து உரித்த கோழி, உயர்ந்த பிரண்டி தொடக்கம் பாரிய மின்பிறப்பாக்திகள் வரை A-9 ஊடாக இங்கு வந்து கொண்டிருக்கின்றனவே! சில தார் பரல்களைக் கொண்டுவந்து இத்தெருக்களை செப்பனிட முடியாதா? அவ்வளவு கையாலாகாத்தனமா? அவ்வளவு வங்குரோத்தா? அவ்வளவு அசமந்தமா? அல்லது "எங்கட வீதிகளை அவங்கள் தோண்டிப் போட்டாங்கள் நாங்களா மூடுவது? அவங்களே மூடட்டும்" என்ற அசட்டு வீராப்பா? மழைகாலம் வந்துவிட்டதே? வீதிகளில் நீந்துவதா?

நான் பல தசாப்தங்களாக யாழ். குடாநாட்டில் வசித்து வருகின்றேன். ஒவ்வொரு வருடமும் கோடை காலமெல்லாம் காத்திருந்து விட்டு மாரி காலம் தொடங்கும்போது வீதிகளைத் திருத்தத் தொடங்குவார்கள். கல்லைக் கொட்டி தாரை உருக்கி மழை நீருடன் கலந்து வீதி போடுவார்கள். மாரி முடிய கல்லுகள் கிளம்பிவிடும். அடுத்த மாரிக்கு வருவார்கள். இந்த மாரியிலும் இதுவே நடக்கிறது. என்ன மர்மமோ? என்ன சாபக்கேடோ?

செயற்திறனற்ற அதிகாரிகள் பற்றி யாரோ கூறியதை பத்திரிகைகளில் வாசித்த ஞாபகம்.

இடைக்கால நிர்வாகம் வரவேண்டும். செயற்றிறனற்றவர்களுக்கு உவராக வேலை செய்வதற்கு "கிளினிக்" வைப்பார்கள். நல்ல பெரிய ஊசி ஊசியாக ஏற்றிவிட்டால் செயற்றிறன் தன்பாட்டில் வரும். காத்திருப்போம்.

\- பரமன்

### மின் கட்டணம் செலுத்திய மக்களின் அங்கலாய்ப்பு இது

மாதகல் புக்கைட்டுலோ வீதியில் உள்ள மக்கள் 1990 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே மின்சார சபையிடம் சென்று இவ்வீதிக்கு மின்சாரம் தரும்படி கேட்டிருந்தார்கள். அதன் பிரகாரம் 1990 ஆம் ஆண்டில் அவ் வீதியில் இருக்கும் மக்களிடம் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு ஆயிரம் ரூபா பணம் கட்டி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு மின்சார சபையால் பணிக்கப்பட்டனர். இதற்கமைய 22 குடும்பத்தினர் 22 ஆயிரம் ரூபா கட்டி பற்றுச்சீட்டை மின்சாரசபையிடம் இருந்து பெற்றனர்.

இருவாரங்களில் தருவதாகக் கூறப்பட்ட மின்சாரம் வழங்கப்படாது பிற்போடப்பட்டது. அத்துடன், நாட்டின் குழப்பநிலை காரணமாக மின்சாரம் அவ்வீதிக்கு வழங்கப்படாதிருந்தது.

2002 ஆம் ஆண்டில் இவ்வீதியில் மக்கள் திரும்பவும் வந்து குடியேறினார்கள். மின்சாரசபையிடம் சென்று தனியாகவும், குழுவாகவும் இவ்வீதிக்கு மின்சாரம் வழங்கும்படி கேட்டார்கள். அதற்கு மின்சார சபையில் இருக்கும் அதிகாரிகள் ஒருவருக்கு இரண்டு வாரத்தில் மின்சாரம் தருவதாகவும், இன்னும் ஒருவருக்கு 45 நாள்களில் வழங்குவோம் என்றும், வேறும் சிலருக்கு நிதி இல்லையென்றும் பற்பல காரணங்கள் சொல்லி தட்டிக்கழித்து வருகிறார்கள். பணம் கட்டிய 22 பேர்களும் வந்தார்களா? என்றும் கேட்கிறார்கள். இம்மக்கள் 1990 ஆம் ஆண்டில் தமது கஷ்ட நிலையிலும் கட்டப்பட்ட 22 ஆயிரம் ரூபாவும் எங்கே போனது என்றும் எந்த நிதியில் இதைச் சேர்த்தார்கள் என்றும் அங்கலாய்க்கிறார்கள்.

தற்போது இவ்வீதியில் 32 குடும்பங்கள் மின்சாரம் எடுப்பதற்காகக் காத்துள்ளன. அத்துடன், இன்னும் பல குடும்பங்கள் வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

இதே பகுதியில் அண்மையில் முன்னிரவு நேரம் பெண் ஒருவருடன் சிறுடையினர் ஒருவர் சேஷ்டை புரிந்த சம்பவம் இடம்பெற்றது. இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதற்கு மின் ஒளி இல்லாதிருப்பதும் வாய்ப்பாக உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டோர் விரைந்து கவனம் எடுப்பார்களா?

இ.சூசைப்பிள்ளை,
யே.ஜெயக்குமார்.
மாதகல்.

# அவளது இறுதிப் பயணம்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

'அவள்' தோல்வியுற்றாலும் தனது கவர்ச்சிகரமான வடிவமைப்பாலும் மிகவும் பிரபலமானவர்களைச் சுமந்து கொண்டு வானவீதியில் பவனி வந்ததாலும் 1980களில் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளில் 'அவள்' அடிக்கடி இடம்பெற்றிருந்தாள். கொன்கோட்டின் 30 ஆவது ஆண்டு நிறையும் கொண்டாட்டங்களை 1999 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு மக்கள் கோலா கலமாகக் கொண்டாடினார்கள். உலகிலுள்ள அனைத்துப்பயணிகள் விமானங்களிலும் கொன்கோட் விமானமே மிகவும் பாதுகாப்பானது என்ற கருத்து அப்போது நிலவி வந்தது. அந்தோ பரிதாபம்! 2000 ஜூலை 25 இல் அக்கருத்தை முழுவதும் மாற்றும் சோகச் சம்பவமொன்று நடந்தேறிவிட்டது. ஏர்பிரான்ஸின் கொன்கோட் விமானமொன்று நியூயோர்க் நகருக்கு புறப்பட்டுச் செல்லத் தயாராகி நிற்கின்றது. அதனுள்ளிருக்கும் 113 விமானப் பயணிகளும் நியூயோர்க் செல்வதையிட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றார்கள். இதோ! விமானம் புறப்பட்டுவிட்டது. விண்ணில் எழுவதற்காக ஓடுபாதையில் வேமாக ஓடிக்கொண்டிருக்கின்றது.

ஆனால்... ஓடுபாதையில் குப்பையாக வீசப்பட்டிருந்த கூரான துண்டொன்றின் வடிவில் தோன்றிய காலன், பயணிகளின் உயிர்களோடு விளையாடினான். அக்கூரான துண்டின் மேலேறிய விமானச் சக்கரங்களின் ஒன்றில் துளையேற்றப்பட்டது. அதனால் ஓடுபாதையிலிருந்து விண்ணில் எழுந்த விமானத்தின் இயந்திரத்தில் தீ மூண்டது. மூண்ட தீயால் விமானம் வீழ்ந்து எரிந்து நாசமானது. கொன்கோட் விமானம் மட்டுமல்ல, அதனுள்ளிருந்த 113 பரிதாபத்திற்குரிய மனிதர்களும்தான். இத்துயர சம்பவத்திற்குப் பின்னரும் கொன்கோட் விமானம் தனது சேவையைத் தொடர்ந்தது. பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சில வகை மாற்றங்களைச் செய்த பின் ஏர்பிரான்ஸும் பிரிட்டிஷ் ஏர்வேசும் தமது கொன்கோட் விமான சேவையைத் தொடர்ந்து மேற்கொண்டன. ஆயினும், 113 மனித உயிர்களைக் காவு கொண்டதால் 'அவள்' தனது பழைய பொலிவையும் கவர்ச்சியையும் இழந்துவிட்டாள். நியூயோர்க நகரில் அமைந்திருந்த உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரங்கள் செப்ரெம்பர் 11இல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து உலக விமான சேவை நிறுவனங்களின் விமான ரிக்கெற் விற்பனைகள் பெரும் வீழ்ச்சி அடைந்தன. பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்தது போல், ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிக்கொண்டிருந்த கொன்கோட் விமான சேவையும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

41 ஆண்டுகளின் முன்னர் பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சுப் பொறியியலாளர்களின் எண்ணத்தில் கருவாக உருவாகி வளர்ந்து பின் குழந்தையாகிப் பல இன்னல்களைக் கடந்து இப்புவியில் பிறப்பெடுத்து விமானத்துறை வரலாற்றில் புதிய சகாப்தத்தையே ஏற்படுத்திய 'அவளது' இறுதிப்பயணம் இவ்வாண்டில்தான் முற்றுப்பெற்றது. ஆம், 2003 ஒக்ரோபர் 23 ஆம் திகதியன்று தனது இறுதி மூச்சை விட்டு 'அவள்' மீளாத்துயில் கொண்டாள். அதாவது, அன்றையதினத்தில்தான் பிரிட்டிஷ் ஏர்வேஸ் தனது விமான சேவையிலிருந்து கொன்கோட் விமானத்தை நீக்கியது என்பது வாசகர்களாகிய உங்களுக்குப் புரிந்திருக்கும். இங்கு 'அவள்' என்று சிறப்பாகக் குறிப்பிடப்பட்டது கொன்கோட் விமானத்தைத்தான் என்பது அனைவருக்கும் புரியும்தானே.

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் பாடசாலையின் ஆசிரியர்
திரு. குட்டிப்பிள்ளை அரசேஸ்வரன் அவர்களது அன்புத் தாயார்
**திருமதி சிவபாக்கியம் குட்டிப்பிள்ளை**
அவர்களது மறைவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை,
யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை.

(24423) (34-11-15-31)

## ஆவணங்கள் எதுவும் இன்றிய வாகனங்களைப் பதியும் ஏற்பாடு

**இத்தால் சகலரும் அறிய வேண்டியது.**

பின்வரும் இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் எங்களது பெயரிலும், கடன்பெற்றோர் பெயரிலும் மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 41 - 3574 | 27 - 1939 | 26 - 8936 |
| 27 - 4673 | 42 - 3927 | 27 - 9771 |
| 28 - 1754 | 42 - 1182 | 41 - 9454 |
| 28 - 1168 | 41 - 9556 | 26 - 8419 |
| 26 - 5112 | 26 - 7299 | 27 - 9052 |
| 28 - 1862 | 26 - 4568 | 28 - 7261 |
| 26 - 8746 | 40 - 7041 | 28 - 6263 |
| 41 - 8617 | 28 - 9697 | 41 - 6126 |

பின்வரும் எங்கள் வாகனங்கள் எங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டு நாங்கள் குத்தகைக்குக் கொடுத்துள்ளோம்.

| | |
|---|---|
| 41 - 4129 | 40 - 2295 |
| 43 - 9944 | 42 - 0761 |

மேற்படி இவ்வாகனங்களை வைத்திருப்பவர்கள் தங்கள் ஆவணங்கள் தொலைந்துவிட்டன என்று சொல்லிப் பொய்ச்சத்தியக் கடதாசி முடித்து தங்கள் பெயரில் பதியமுற்படலாம். எனவே சமாதான நீதிவான்கள், பிரதேச செயலர்கள், மோட்டார் வாகன பதிவு திணைக்கள உத்தியோகத்தர்கள் தயவுசெய்து இதனை கவனத்திற் கொள்ளவும்.

முகாமைத்துவ இயக்குநர்,
**மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டட்,**
555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(24428) (34-11-15-31)

## மரண அறிவித்தல்

**சின்னையா வின்சன்ட் கோமகன்**
(ஓய்வுபெற்ற ஊழியர், மின்பகுதி - யாழ். மாநகரசபை)

மூத்த விநாயகர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட சி.வின்சன்ட் கோமகன் அவர்கள் நேற்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - நேசம்மா அவர்களின் கனிஷ்ட புத்திரரும் பொன்னையா - பூரணம் அவர்களின் அன்பு மருமகனும் மாகிரட்டின் அன்புக் கணவரும் யூடிட்டா, ஜெனிட்டா, யூட்சுதர்ஷன் (விற்பனை முகவர், சிலிங்கோ இன்சூரன்ஸ் கொம்பனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் (செயபாக்கியம் (கனடா), வண. அல்பிரட் சின்னையா (கனடா), அரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நிர்மலா (கனடா), சரவணமுத்து, காலஞ்சென்ற டேவிட், காலஞ்சென்ற மொறிஸ் மற்றும் ரெட்ணசிங்கம் (சிங்கம்), ஜெயம் ஆகியோரின் மைத்துனரும் அன்ரன் சண்முகசோதியின் மாமனாரும் ஜோஜ் (கனடா), ஒலிவர் (கனடா), லைனல் (கனடா), பேனாட் (கனடா), நோயல் (கனடா), பிறின்சி (கனடா), அஜித்தா (லண்டன்), டினேஷ் (லண்டன்), அமரன், ஆமலன் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் மைக்கலின் (கனடா), ஏபில் நிர்மலன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.11.2003) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் (இல.3 சந்தனமாதா ஒழுங்கை, சுண்டுக்குளி) இருந்து பாண்டியன்தாழ்வு சந்தனமாதா ஆலயத்திற்கு நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.3, சந்தனமாதா ஒழுங்கை,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
வி.கோ.யூட்சுதர்ஷன் (மகன்).

(24427)(31-11-15)

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

காலம் :- 2003.11.16 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 மணி

1. பிரேரணைகள் இருப்பின் 2003.11.10ஆம் திகதிக்கு முன் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.
2. புதிதாகச் சேரவிரும்புவோரும் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.

தி.யோகசாமி
செயலாளர்.

(C/31130) (26-11-31)

## ஈரவிழிகளுடன் நான்காவது ஆண்டில்...



## கரும்புலி மேஜர் அருளன்
## (நந்தகோபாலன் துஷ்யந்தன்)

| வீரப் பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 06.10.1977 | 05.11.1999 |

"அம்மா நான் சாகவில்லை, எனது உயிரில் அரைவாசியை எமது தலைவரிடமும், மீதியை உங்களிலும், தங்கையிலும், என் பாசமிகு போராளிகளிலும், என் மக்களிலும்தான் வைத்திருந்தேன். என் உயிரை வைத்திருந்தவர்கள் ஒருவரும் சாகவில்லையே? அப்படியானால் நான் எப்படி சாகமுடியும்? எனது பெறுமதியற்ற உடலைத்தான் என் இலட்சியத்திற்காகச் சிதறடிக்க உள்ளேனே தவிர நான் வேறெதுவும் புதிதாகச் செய்யவில்லை."

அன்பு நண்பனே! உன்னை நினைவுகூரும் இத்தினத்தில் ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கொள்கின்றோம்.

உன் நினைவுகளுடன் :
கல்லூரி நண்பர்கள்.

(24426) (31-11-15)


எமது சேவையை விஸ்தரிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்!



ஊர்மிளா
ஸ்ரூடியோ, வீடியோ அன் தொலைத்தொடர்பு நிலையம்

நவீன டிஜிட்டல் வீடியோ கமரா மூலம் மிக்சிங் முறையிலமைந்த சிறந்த படப்பிடிப்பு.

ஸ்ரில் கலர், கறுப்பு வெள்ளை படப்பிடிப்பு.



ஸ்ரில் கலர்ப் படங்களை டிஜிட்டல் வடிவமைப்பில் அல்பம் கட்டுதல்.



உள்நாட்டு, வெளிநாட்டு, இன்ரநெற் தொலைபேசித் தொடர்புகள்.

கற்றுலா மற்றும் யாழ் - கொழும்பு பஸ் சேவை.



ஆகியவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள:




ஊர்மிளா
ஸ்ரூடியோ, வீடியோ அன் தொலைத்தொடர்பு நிலையம்

உரிமையாளர் :-
பொ. இராஜேஸ்வரன்
(ஈசன்)

3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
☎: உள்ளூர் 021 222 6587 வெளியூர் 0094 21 222 6587

(C/31128) UTHAYAN Graphics

## ஆனைக்கோட்டை, சாவல்கட்டுப் பகுதியில்

# கணவனை இழந்த பெண்களுக்கான உதவித்திட்டச் செயற்பாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.5

கணவனை இழந்த பெண்களுக்கான உதவித் திட்டம் ஒன்று ஆனைக்கோட்டை சாவல்கட்டுப் பகுதியில் சாந்திகம் வெளிக்கள உத்தியோகத்தர்களினால் தற்போது செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

கடந்தகால யுத்த சூழ்நிலையினாலும் இடப்பெயர்வுகள் மற்றும் தற்கொலையினாலும் கணவனை இழந்த பெண்களுக்கு இந்த உதவித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

கணவனை இழந்த பெண்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டியவர்களாக உள்ளனர். திடீரென ஏற்பட்ட இழப்பு, தனிமை, குடும்பப் பொறுப்பு மற்றும் சமுதாயப் புறக்கணிப்பு என்பனவற்றினால் உடல், உளரீதியாக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய பெண்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அதனைத் தீர்ப்பதற்காக சாந்திகம் உள சமூகப் பயிற்றுவிப்பாளர்களின் உதவியுடன் கடந்த ஆண்டு ஜனவரியில் இப்பெண்களுக்கான சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

"தாரகா விதவைகளுக்கான மலர்வு மையம்" என்னும் இச்சங்கத்தில் தற்போது இளம்பெண்கள் உட்பட 95 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இத்தகையவர்களின் உளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், சமூகத்தின் கணிப்பில் இவர்களை முன்மாதிரியானவர்களாக ஆக்குவதற்கும் சாந்திகம் உளசமூகப் பயிற்றுவிப்பாளர்களும் விதவைகளுக்கு ஆதரவு வழங்கும் நிகழ்ச்சித்திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களும் ஆதரவு வழங்குகின்றார்கள்.

தகப்பனை இழந்த பிள்ளைகள் சமுதாயத்தில் முன்மாதிரியானவர்களாகத் திகழ்வதற்கு வேண்டிய கற்பித்தல் செயற்பாடுகளும் அவர்களது ஆக்கத்திறனை வெளிக்கொணரும் முகமாகப் பல கலை நிகழ்வுகளும் போட்டிகளும் நடத்தப்படுகின்றன. அத்துடன், அவர்களுக்கு குழுச்சிகிச்சை வழங்கப்படுவதுடன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன.

தற்போது சாவல்கட்டுப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டம் படிப்படியாக ஏனைய கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளைப் பார்வையிட்ட பின்லாந்து அரச பிரதிநிதியின் சிபார்சுக்கமைய மேற்படி அரசு இத்திட்டச் செயற்பாட்டிற்கு வேண்டிய நிதி உதவியை வழங்கியுள்ளது. (ம)

# ஆயித்தியமலையில் இடைத்தங்கல் முகாம்!

மூதூர்,நவ.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்நாட்டுப் போர் காரணமாகப் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்குடன் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆயித்தியமலையில் இடைத்தங்கல் முகாமொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கட்டட வேலைகள் பூர்த்தியானதும் இவ்வருட இறுதிக்குள் முகாம் திறக்கப்படும்.

இந்த இடைத்தங்கல் முகாமில் முதலாவது தொகுதியாக 150சிறுவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். இவர்களுக்கு கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின் பெற்றோர்களிடம் அல்லது பாதுகாவலர்களிடம் அவர்கள் ஒப்படைக்கப்படுவர்.

- இவ்வாறு யுனிசெவ் நிறுவன மாவட்ட பிரதிநிதி தெரிவித்தார்.

# புலிகளின் வரைவை இறுகப்பிடித்து பேச்சை உடன் ஆரம்பிக்கவேண்டும்

## சந்திரநேரு எம்.பி. தெரிவிப்பு

காரைதீவு,நவ.5

பலத்த விட்டுக்கொடுப்புடன் விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக வரைவைத் தயாரித்துள்ளனர். எனவே, அரசு தற்போது கிடைத்திருக்கும் சமாதானக் கரத்தை இறுகப்பிடித்து பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றச் செயலர் அரியநாயகம் சந்திரநேரு இவ்வாறு கூறியுள்ளார்.

புலிகள் சமர்ப்பித்திருக்கும் வரைவு குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி நிர்வாக சபையை அம்பாறை மாவட்டத் தமிழர்கள் பூரணமாக வரவேற்கின்றனர்.

வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த அந்த வரைவில் பல முன்னேற்றகரமான விடயங்கள் உள்ளன. இலங்கையின் இன ஐக்கியம், சமாதானம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அவை முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மதச்சார்பின்மை என்ற விடயம் வரவேற்புக்குரியது.

அரசு தற்போது கிடைத்துள்ள சமாதானக் கரத்தை இறுகப்பிடித்து அடுத்தகட்டப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பலத்த விட்டுக்கொடுப்புக்களுடன் விடுதலைப் புலிகள் இந்த வரைவை வரைந்துள்ளனர்.

சகல இனமக்களும் நிம்மதியாக வாழக்கூடிய நிலைமை இதன் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

சமாதான விரோதிகளைவிட்டு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அவர்கள் இன்று மட்டுமல்ல என்றும் எதைச் சொன்னாலும் எதிர்ப்பார்கள்.

எனவே, பரீட்சை முடிவுகள் போன்று நியாயமான, நீதியான வரைவு கிட்டியுள்ளது. அதை அரசு சரியாகப் பயன்படுத்தவேண்டும் - என்றார். (ம)

# ஊடகவியலாளர்கள் 6 பேருக்கு வலைவிரிப்பு

தமிழ் - சிங்களக் கலைஞர்களின் 'கலைக்கூடல்' நிகழ்வின்போது இடம்பெற்ற அசம்பாவிதங்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஊடகவியலாளர்கள் ஆறுபேர் உட்பட பத்துப்பேரைத் தேடி பொலீஸார் வலைவிரித்துள்ளனர்.

கடந்த புதனன்று கொழும்பு புதிய நகர மண்டபத்தில் தமிழ் - சிங்களக கலைஞர்களின் 'கலைக்கூடல்' நிகழ்வின்போது சிஹல உறுமய கட்சியைச் சேர்ந்த குண்டர்கள் என்று கூறப்படும் குழு ஒன்று அங்கு திடீர் தாக்குதல்களையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. இச்சம்பவம் தொடர்பாக, ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக குற்றத் தடுப்புப் பொலீஸாரும் இரகசியப் பொலீஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் மூலம் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்று பத்துப் பேர் இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் ஆறுபேர் ஊடகவியலாளர்கள். இவர்களை கைதுசெய்வதற்காகப் பொலீஸார் சென்றபோது இந்த ஊடகவியலாளர்கள் அனைவரும் வீடுகளையும் பூட்டிவிட்டு குடும்பத்தோடு தலைமறைவாகிவிட்டனர் என்று தெரியவந்துள்ளது.



புத்தளம் தொகுதியிலுள்ள 31 பின்தங்கிய கிராமங்களுக்கு மின்விநியோகம் செய்யும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக புத்தளம் நகரிலுள்ள மூன்றாம் வட்டாரமான 'செம்மண்திடல்' என்னும் கிராமத்துக்கு மின்விநியோகப் பணியை எடுத்துக்காட்டும் படிகத்தை நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் திரைநீக்கம் செய்துவைக்கிறார். அருகில் புத்தளம் தொகுதி ஐ.தே. கட்சி அமைப்பாளர் எம்.ஐ.பி. ஹாபி, புத்தளம் நகர சபை பதில் தலைவர் குவின்டன் ஜோசப் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம் : புத்தளம் செய்தியாளர்)*

# தலையில்லாத சடலங்கள் கடவத்தையில் மீட்பு!

கடவத்தை எல்கெனிய மயானத்தில் தலையில்லாத இரண்டு சடலங்களை கடவத்தை பொலீஸார் நேற்று முன்தினம் மீட்டனர்.

மயானத்திற்கு அருகில் உள்ள கடை உரிமையாளர் ஒருவர் இந்தச் சடலங்கள் பற்றி பொலீஸாருக்கு அறிவித்தார்.

கடந்த வாரம் மரணமடைந்த ஒருவரைப் புதைக்க மயானத்தில் குழி வெட்டப்பட்ட வேளையில் இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் -

இந்தச் சடலங்களைப் பார்க்கும் போது இது ஒரு கொலையாக இருக்கலாம் என்றும் - பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

மேலதிக விசாரணையை கடவத்தை பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (ம)

## இரணைமடு குளத்திலிருந்து குடாநாட்டுக்கு

# குடிதண்ணீர் எடுத்துவரும் திட்டத்துக்கு தேசிய நீர்வழங்கல் சபை இணக்கம்

யாழ்ப்பாணம்,நவ.5

இரணைமடு குளத்தில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு நிலக்கீழ் குழாய்கள்மூலம் குடிதண்ணீரை எடுத்துவரும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைமையகம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது.

சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் மேற்படி நீர்விநியோகத் திட்டம் தயாரிக்கப்பட்டு தலைமையகத்துக்கு அண்மையில் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

சபையின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது மேற்படி திட்டம் பற்றி ஆராய்ந்திருந்தனர்.

அந்தத் திட்டம் தொடர்பாக தமது அமைச்சிடம் தெரியப்படுத்தியதையடுத்து அத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு உதவிகளை வழங்க அமைச்சு சம்மதம் தெரிவித்திருப்பதாகக் கூறப்பட்டது. இதனையடுத்தே மேற்படி திட்டத்தினை மிகவிரைவில் செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைமையகம் தீர்மானித்திருக்கிறது.

இரணைமடு குளத்திலுள்ள நீரை சுத்திகரித்து நிலக்கீழ் குழாய்கள் மூலமாக குடாநாட்டில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு எடுத்துவந்து விநியோகிப்பதே இத்திட்டமாகும். (ம-4)

# அமைச்சர்களுக்கு எதிரான வழக்கை விசாரிக்க உயர்நீதிமன்றம் அனுமதி

கொழும்பு,நவ.5

இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்தானந்த அளுத்கமகே உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை தொடர்ந்து விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

2000ஆம், 2001ஆம் ஆண்டுகளில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தமக்கும் தமது ஆதரவாளர்களுக்கும் இழைக்கப்பட்ட தீங்குகள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பாக இந்த மனுவை அவர் தாக்கல் செய்துள்ளார்.

கூட்டுறவு அமைச்சர் ஏ.ஆர்.எம். அப்துல் காதர், விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் கெஹலிய திஸ்ஸநாயக்க ஆகியோர் 4ஆம், 5ஆம் எதிர்மனுதாரர்களாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கம்பஹா பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் சதசிரி பண்டார, அதே பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொறுப்பதிகாரி அனுரா சந்திரபால, பொலீஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் முதலாம், இரண்டாம், மூன்றாம், ஆறாம் எதிர் மனுதாரர்களாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இரு அமைச்சர்களின் ஆதரவுடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களை, ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் தாக்கிக் காயப்படுத்தினர் என்று மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

# 14 லட்சம் ரூபா செலவில் கமநல நிலையங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

14 லட்சம் ரூபா செலவில் இரு கமநல சேவைகள் நிலையக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாக யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாகச் சேதமடைந்த சாவகச்சேரிக் கிளையும் வடமராட்சி புலோலி பிரதேசத்திலுள்ள கிளையுமே புனரமைக்கப்பட்டு வருகின்றன.

புனரமைப்பு வேலைகள் அடுத்த மாதமளவில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

சாவகச்சேரி மற்றும் வேலணை ஆகிய பிரதேசத்தில் உள்ள கமநல அபிவிருத்தி நிலையக் கிளைகளில் புதிதாக இரு கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டது. (ம-7)

# கைதடி மேற்குப் பகுதியில் கசிப்புக் குகை சிக்கியது

யாழ்ப்பாணம்,நவ.5

கைதடி மேற்குப் பகுதியில் கசிப்பு உற்பத்திக்குகை ஒன்று சாவகச்சேரி பொலீஸாரால் முற்றுகையிடப்பட்டுக் கைப்பற்றப்பட்டது.

கடந்தவாரம் இப்பகுதி இளைஞர்கள் கொடுத்த தகவலையடுத்து பொலீஸ் நிலைய குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி தலைமையிலான குழு கசிப்புக் குகை அமைந்திருந்த வட்டினை முற்றுகையிட்டு சோதனை நடத்தியது. அங்கிருந்து ஆயிரத்து 800 மி.லீ வடிசாராயம், மூன்று பரல் கோடா, கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியது.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் இதே இடத்தைச் சேர்ந்த அலோசியஸ் தேவகுமார் என்பவரைக் கைதுசெய்த பொலீஸார், அவரை கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

விசாரணை செய்த நீதிவான் பா.சுப்பிரமணியம் இந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கும்படியும் உத்தரவிட்டார். (ம-11)

## மின் தாக்கி இளைஞர் பலி!

மட்டக்களப்பு வொயிஸ் வீதியில் வசித்து வந்த நபரொருவர் நேற்றுக் காலை மின்சாரம் தாக்கிப் பலியாகியுள்ளார்.

மரணமடைந்தவர் சேலான் வங்கியின் காத்தான்குடி கிளையில் கடமையாற்றும் வவுணதீவைச் சேர்ந்த என்.கிரிதரன் (வயது-21) என மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர்.

அன்ரனாக் கம்பியைத் தொட்டபோதே இவரை மின்சாரம் தாக்கியுள்ளது. மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின் அங்கு இவர் மரணமடைந்துள்ளார்.

## கொட்டாஞ்சேனையில் இளைஞர் சுட்டுக்கொலை!

கொட்டாஞ்சேனையில் இளைஞர் ஒருவர், இனம்தெரியாதவர்களால் துப்பாக்கியினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.15 மணியளவில் கொட்டாஞ்சேனை மகா வித்தியாலய மாவத்தைச் சந்தியில் வைத்து இடம்பெற்றுள்ளது. கொம்பனித்தெருவைச் சேர்ந்த மொஹமட் பாரூக் மொகமட் சதீர் (வயது 30) என்ற இளைஞரே சுட்டுக்கொலை செய்யப்பட்டவரென்று தெரியவருகிறது.

இந்தக் கொலையைப் புரிந்த பாதாள உலக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன அலப்பத்தி தெரிவித்தார்.

இந்தக் கொலை ஆள்மாறாட்டத்தால் ஏற்பட்டுள்ளது என தாம் சந்தேகிப்பதாகவும் அவர் கூறினார். கொலைசெய்யப்பட்ட நபர் சாதாரண கூலித்தொழிலாளி. அவருக்கு பாதாள உலக நபர்களுடன் எவ்வித தொடர்பும் இருந்ததில்லை என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட

**உயர்திரு. இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராஜா (ஸ்ரீராஜ்)**

(உரிமையாளர், ஸ்ரீராஜ் தொலைத் தொடர்பகம்)

அவர்கள் இன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் இவரின் சமூகசேவை மேன்மேலும் வளர்ந்து நீண்டகாலம் சேவையாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.
வட்டுக்கோட்டை.

(C/31133) (35-11-13-15-31)


## சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு வாகனங்கள்

தென்மராட்சி,நவ.5

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்திற்கு மூன்று வாகனங்கள் பொலீஸ் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

பிக்கப், லாண்ட் றோவர் லான்ட் மாஸ்டர் ஆகியவையே வழங்கப்பட்டுள்ளன.

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் ரோந்து சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பீ.என். அபேரத்ன தெரிவித்தார்.

(ம-117)


## மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

*அன்புடையீர்!*

இன்று (05.11.2003) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் 11.00 மணிவரையில் வரும் சுபமுகூர்த்த வேளையில் -

**டினுசா புக் சென்ரர்**
**அன்**
**கொம்பியூட்டர் கிறபிக்ஸ்**

என்னும் புதுக்கடையைத் திறப்பு விழா செய்ய திருவருள் கைகூடியிருப்பதால் அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்
(ஜெட்மோட்டோர்ஸ் அருகில்). (24430) (33-11-15-31)

திரு.சி.குகேந்திரன்
உரிமையாளர்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அரச மரக்கூட்டுத்தாபன வடமாகாண முகாமையாளரும், சிறந்த சமூக சேவையாளரும், நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினருமான சிங்கராயர் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டைச் சேர்ந்த

**உயர்திரு லயன் கந்தையா விஜயரட்ணம்**

அவர்கள் யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாகப் பதவியேற்றதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைந்து பாராட்டி வாழ்த்துவதுடன், அவரது சேவைகள் மேலும் உயர்வுபெற இறையாசி வேண்டி வாழ்த்துகிறோம்.

பொறுப்பதிகாரியும் ஊழியர்களும்
விற்பனைப் பிரிவு,
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

அலுவலர்களும் ஊழியர்களும்
பிராந்திய அலுவலகம்,
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(24425) (24-11-31)



## வியாபார நிலைய உரிமையாளர்களே!

உங்களுக்குத் தேவையான 2004ஆம் ஆண்டுக்கான றோல் கலண்டர்கள், டயறிகள் என்பனவற்றை நேரடியாக இறக்குமதி செய்துள்ளோம். மொத்தமாகவும் சில்லறையாகவும் உங்கள் தெரிவுகளுக்கேற்ப பெற்றுக்கொள்ளலாம்.

இக்கலண்டர்களில் உங்கள் வியாபார நிலையப் பெயர்களைக் குறைந்த கட்டணத்தில் அச்சுப்பதித்துக்கொள்ளலாம்.

*தொடர்பு:-*

**பிரியங்கா பிறிண்டர்ஸ் & பிரியங்கா புத்தகசாலை**

பிரதான வீதி, பருத்தித்துறை.

(24432)(35-11-15-31)



## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம் ஐப்பசித் திங்கள் 21 ஆம் நாள் (07.11.2003) வெள்ளிக்கிழமை சதுர்த்தசித் திதியும் ரேவதி நட்சத்திரமும் அமிர்த சித்தமும் கூடிய சுபயோக தினத்தன்று பகல் 09.00மணிமுதல் 11.00மணி வரையுள்ள தனுசு லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**மனோகரன்**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**பவானி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு பருத்தித்துறை சிவன் கோவில் பார்வதவர்த்தனி கலா மண்டபத்தில் திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறும் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி கோ.செல்வவிநாயகம்,
(ஓய்வுபெற்ற அதிபர்),
"சாந்தம்", ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

இருவீட்டார் அழைப்பு

திரு.திருமதி சே.சதாசிவம்
(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர்
பல நோ.கூ.சங்கம்),
நா.மு.வீதி, பருத்தித்துறை.

(24433) (34-11-15-31)



## அறிவித்தல்

நல்லூர் வடக்கு, புதுச் செம்மணி வீதியிலுள்ள நினைவியாதோப்பு என்னும் காணியிலுள்ள வீடு என் கணவர் காலஞ்சென்ற மா. பிறைசூடிக் குரியது. இது சம்பந்தமாக ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் இருந்தால் என்னுடன் தொடர்புகொள்ளவும்.

திருமதி சரஸ்வதி பிறைசூடி
41/2, பஸல்ஸ் லேன்,
வெள்ளவத்தை.
*T.P. 011 - 2559349.*

(24429)(35-11-15-31)



## சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா (மணி விழா)

## நன்றி நவிலல்

31-10-2003 வெள்ளிக்கிழமை கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் நடைபெற்ற எமது ஷஷ்டியப்தபூர்த்தி சாந்தி விழாவிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 'தீப பூஜை' நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், விழாவை முன்னின்று நடத்தி வைத்த மாவை ஆதீனம் சிவஸ்ரீ து. சுந்தரமூர்த்தி குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் ஆகியோருக்கும், நூல் வெளியீட்டின்போது வாழ்த்துரைகள் வழங்கிய யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் மற்றும் வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்த கௌரவ இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன் அவர்களுக்கும், பத்திரிகை மூலம் வாழ்த்துச் செய்திகள் வெளியிட்ட கோப்பாய் வீரபத்திரர் கோயில் பரிபால சபையினர், யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபையினர், ஸ்ரீ பரமேஸ்வரக் கல்லூரி இயக்குநர் சபையினர், யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தினர் ஆகியோருக்கும்,

மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

*'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'*

வேதாகம கிரியாபாநு
சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்
குடும்பத்தினர்.
வீரபத்திரர் கோயில் - கோப்பாய்.

(24431) (11-15)



**SHARP**
be sharp

## குடாநாட்டு வாடிக்கையாளர்களே!

அதி நவீன ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடியதும் குறைந்த மின்சாரத்தில் இயங்கக்கூடியதுமான குளிர்சாதனப் பெட்டிகளை யாழ். நகரில் வழங்கும் **பிறவுண்ஸ்** தரும் மாபெரும் பரிசுகள்

★ SJK 25JB, SJK 21JB குளிர்சாதனப் பெட்டி ஒன்றுடன் SHARP றைஸ் குக்கர் ஒன்றை இன்றே இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

★ SJK 22TG குளிர்சாதனப் பெட்டியை கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் விசேட விலைக்கழிவுடன் 5 வருட உத்தரவாதத்துடன் கூடிய விற்பனையின் பின் சேவையை வழங்குகின்றோம்.

இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

தொடர்புகளுக்கு :

முகாமையாளர்

**பிறவுண் அன்ட் கம்பனி**
**பிறவுண்ஸ் காட்சியறை**

இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 2225159
0777 110791

(C/31129) (32-11-15)

# மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஐப்பசி மாதம் 19ஆம் நாள் இன்று (05-11-2003) புதன் கிழமை காலை 9மணி 10நிமிடம் முதல் 11.00மணி வரையுள்ள தனு லக்கின சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**யோகாஸ் நகை அகம்**

**YOGAS JEWELLERY**

என்னும் ஸ்தாபனத்தை இறைவன் துணைகொண்டு ஆரம்பித்து வைக்க இருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

*ராஜா கொம்பிலக்ஸ்,*
*205, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (24434) (32-12-18-29)

தங்கள் நல்வரவை நாடும்:
**சுந்தரலிங்கம் யோகச்சந்திரன்.**

# நல்லடக்க ஆராதனை

## திருமதி பிளசம் குணமணி அடைக்கலம்

யாழ்ப்பாணம் டேவிட் வீதியைச் சேர்ந்த

**திருமதி பிளசம் குணமணி அடைக்கலம்** அவர்களின் நல்லடக்க ஆராதனை இன்று (05.11.2003) புதன்கிழமை இல.111, டேவிட் விதியிலுள்ள வீட்டிலிருந்து பிற்பகல் 3.30 மணியளவில் எடுத்துச்செல்லப் பட்டு, பிற்பகல் 4 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கபட்ட பின்னர் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

*இல.111,டேவிட் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (24441) (36-12-18-29)

தகவல்:
சு.அடைக்கலம் (கணவர்).

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் முருகேசு

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஓடக்கரை வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முருகேசு 04.11.2003 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - தெய்வி ஆகியோரின் அன்பு மகனும் இராசம்மாவின் கணவரும், விமலாதேவி, இந்திரகலாதேவி, குலராஜா (டென்மார்க்), மகேந்திரதேவா (லண்டன்), சாரதாதேவி (லண்டன்), கருணானந்ததேவா (லண்டன்), தேன்மொழிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினசிங்கம், சிவபாலன், வாசுகி (டென்மார்க்), பபிதாஜினி, சந்திரன் (லண்டன்), கலா (லண்டன்), பரமேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் விக்னேஸ்வரி, சுதன் சிந்து, கிரி, மிரா, பிருந்தன், அஜித், எரியன், கெவின், செந்தூடில்கா, டினா, வக்சிகா, டக்சிகா, கீர்த்திகா, மதுரஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப. 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓடக்கரை கராச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*சேச்றோட். ஓடக்கரை,*
*சங்கானை கிழக்கு, சங்கானை.*
(C/31139) (30-12-18-29)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி பகவதி திசைவீரசிங்கம்

துன்னாலை கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்தவரும் அவ்விடத்தைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி திசைவீரசிங்கம் நேற்று (04-11-2003) செவ்வாய்க்கிழமை இறையடி அடைந்துவிட்டார்.

அன்னார் தி.மங்களேஸ்வரி( தேசிய வீடமைப்பு அதிகாரசபை யாழ்ப்பாணம்), தி.அருந்தவச்செல்வி( கரவெட்டி/துன்னாலை மெ.மி.த. கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

*வெல்லிக்கம் தோட்டம்,*
*துன்னாலை கிழக்கு,*
*கரவெட்டி.* (C/31140)(36-12-18)

தகவல்:
பிள்ளைகள்.

# தேவை

டிஜிற்றல் வீடியோக் கமரா படப்பிடிப்பாளர் உடன் தேவை.

நேரில் வரவும்

**ஊர்மிளா ஸ்ருடியோ & வீடியோ**

3ஆம் கட்டை,
கல்வியங்காடு.

☎ 222 6587

(C/31127)(35)

# விற்பனையாளர் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர் தேவை. 30 வயதுக்கு மேற்பட்டவர்கள அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

உடன் நேரில வரவும்.

றொலெக்ஸ் பேக்மாட்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(24438) (32)

# நிறைஞ்சனாலை சங்கானை

விஜய், பூமிகா நடித்த

**பத்ரி** (சினிமா)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு

× X ×

# லிபேட்டி அச்சுவேலி



சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் நடித்த

**திவான்** (சினிமா)

காட்சி நேரம்: 3.00, 7.00.

# லஷ்சுமி சினிமா இணுவில்



விஜய், ரம்பா, மணிவண்ணன், குஷ்பு இன்னும் பலர் நடிப்பில்

**மின்சாரக் கண்ணா** (சினிமா)

காட்சிநேரம்:10.30, 3.00, 7.00. (பி.நே.)

# நாகம்ஸ் சுன்னாகம்



நீனாரி காட்சிகள் 11.00 3.00 7.00 (பி.நே.)

# ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதினத்தில் வெளியாகிய

சேதுபுகழ் விக்ரம், சூர்யா, லைலா நடித்த



**பிதாமகன்**

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)

ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வலிங்கம் சந்திரகுமார் (ஓமான் சந்திரன்)

திருநெல்வேலி, பத்திரகாளி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தச்சன்தோப்பை புகுந்த இடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சந்திரகுமார் நேற்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் அமரர்களான விஸ்வலிங்கம் ஆச்சாரியார் - தங்கரத்தினம் தம்பதிகளின் புத்திரனும் அமரர்களான தர்மலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் கனகம்மா (கண்ணம்மா)வின் அன்புக் கணவரும் பிரதீப், பிரதீபா, பிரதாப், பிரசங்கா, பிருந்தா, பிரசாந்தி (நாவற்குழி ம.வி. மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஜயகுமார், விஜயராணி, இரத்தினகுமார், சூரியகுமார், சிறீதரன் (சுவிஸ்), சத்தியலிங்கம், தியாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மன்மதராஜின் (மாணவன், சப்பிரகமுவா பல்கலைக்கழகம்) பெரிய தகப்பனாரும் கமலாதேவி, சுந்தரலிங்கம் (வவுனியா), சுபத்திரா (ஆசிரியை, மட்டக்குளி), மகாலட்சுமி, பத்மலோஜினி (சுவிஸ்), அருட்செல்வி, அமுதா, சச்சிதானந்தம், சந்திரமதி (பவளம்), கார்த்திகேசு (இரத்தினம்), தெய்வேந்திரம், சாந்தசரோசினி (குட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2003) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*பத்திரகாளி கோயிலடி,*
*திருநெல்வேலி.* (C/31138) (29-13-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
வி.விஜயகுமார் (சகோதரன்)

## கணபதிப்பிள்ளை கணேந்திரநாதன்

(முன்னாள் லிகிதர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)

தெல்லிப்பழையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கணேந்திரநாதன் நேற்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கோவேந்திரமணி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற அப்புத்துரை - நவமணிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் கிரிசாந்தி, கஜனன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுமணதாஸ் அவர்களின் மாமனாரும் டர்சாவின் தாத்தாவும் பவேந்திரநாதன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கவேந்திராதேவி ஆகியோரின் சகோதரனும் ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி யோகேஸ்வரி, சோமஸ்கந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மொரட்டுவவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மொரட்டுவ.*
*துரைமன் கலட்டி,*
*தெல்லிப்பழை.*
*T.P.:011-2611506*
(24439) (30-13-18-29)

தகவல்:
அ.சோமஸ்கந்தராஜா.

## திருமதி ஐயாத்துரை சின்னம்மா

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் பலாலி மேற்கை வசிப்பிடமாகவும் ஆவரங்காலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை சின்னம்மா 03.11.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி - ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காசிப்பிள்ளை - முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவலோகநாதன் (ராசு) மற்றும் இராசமலர், செல்வரத்தினம் (ரத்தினம்), பத்மாவதி, குணரத்தினம் (சந்திரன் - பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் சிவகுமார் (சிவா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 05.11.2003) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டியாகுறிச்சி,*
*ஆவரங்கால்.* (24435) (29-13-18)

தகவல்:
இரத்தினம், சிவா,
சந்திரன் (பிரான்ஸ்) (மகன்மார்)

## காசிப்பிள்ளை லங்கநாதன்

(ஓய்வுபெற்ற மண் பகுப்பாய்வாளர், மலேசியா, கோலாலம்பூர்)

பயிரிக்கூடல் காரைநகரைச் சேர்ந்த காசிப்பிள்ளை லங்கநாதன் அவர்கள் நேற்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் மாரடைப்பால் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் காசிப்பிள்ளை - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் ஞானமணி (பல்கலைக்கழக தாதி அதிபர், மலேசியா) அவர்களின் அன்புக் கணவரும் ரமேஸ (ஆஸ்திரேலியா) அவர்களின தகப்பனாரும் காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் அன்னபாக்கியம் (கொழும்பு), ராணிதேவி (வவுனியா), பஞ்சநாதன் (ஓய்வுபெற்ற கணக்காளர், மன்னார்), Dr.சந்திரசேகரம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற ரயில் நிலைய அதிபர், காரைநகர்), காலஞ்சென்ற அம்பலவாணர் (ஓய்வூதியர்) மற்றும் பொன்னம்பலம் (படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), Dr.மனோன்மணி (லண்டன்), செல்வராணி (ஆசிரியை, மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2003) புதன்கிழமை கோலாலம்பூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34/17, வளாக ஒழுங்கை,*
*திருநெல்வேலி.* (24436) (29-12-18)

தகவல்:
சு.சத்தியமூர்த்தி (மருமகன்)

கலர்ப்படப் பிரதியாக்கலில் பல ஆண்டு அனுபவம்வாய்ந்த **சுப்பர்ஷோ**

யாழ்.நகரில் துரிதகதியில் பிரதியாக்கல் செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில், புகைப்படப் பிடிப்பாளர்களின் நலன்கருதி எமது இணைநிறுவனமான கொழும்பு, கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள

**SUPER SHOW DIGITAL COLOUR LAB**

உடன் இணைந்து Fuji Frontrer 350 மெசின்மூலம் Digital பிரதியாக்கங்களுக்கான ஓடர்களை யாழ்ப்பாணத்திலும் ஏற்று மூன்று தினங்களில் பிரதியாக்கம் செய்து வழங்குகின்றோம் என்பதை அறியத்தருகின்றோம்.

✳ கலர்ப்படச் சுருள் ✳ புளோப்பி ✳ MO டிஸ்க் ✳ சிப் டிஸ்க் ✳ சி.டி.ஆர்.

ஆகியவற்றில் இருந்து 3R முதல் 18X16 வரையான அளவுகளிலும் அல்பத்துக்கான (முன் பின் Cover Page) படங்களையும் மற்றும் COOL HOT Lemanation உட்பட அனைத்து ஓடர்களையும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்:

149,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2082

198/06,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ஆகிய முகவரிகளில் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. (C-31137) (12-18-29)

# மூன்று அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக சிறில் ஹேரத்தும், மக்கள் தொடர்பாடல் அமைச்சின் புதிய செயலாளராக திலக் ரணவிராஜாவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜனாதிபதியின் இந்த அதிரடி நடவடிக்கை, ஆட்சி அதிகார மாற்றத்துக்கான அறிகுறி என்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டிருக கின்றனர்.

மேற்படி மூன்று அமைச்சுக்களின் பொறுப்பில் இருந்து இந்த மூன்று அமைச்சர்களும் விடுவிக்கப்பட்டாலும அவர்கள் வசமுள்ள ஏனைய அமைச்சுக்களை - அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவியோடு - அவர்கள் தொடர்வர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சராக திலக் மாரப்பனவும், தபால் தொலைத் தொடர்பு அமைச்சராக இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும், கிறிஸ்தவ விவகார அமைச்சராக ஜோன் அமரதுங்கவும் பதவியில் நீடிப்பர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் முக்கிய விஜயத்தை மேற்கொண்டிருக்கும் வேளையில் ஜனாதிபதி மேற்கொண்ட இந்த நடவடிக்கை தேசிய ஐக்கிய முன்னணி அரசை பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

எனினும், அமெரிக்காவில் உள்ள பிரதமர் பதற்றமோ, அவசரமோ காட்டாமல் தனது அமெரிக்க பயணத்தை முன்னைய திட்டப்படி தொடர்கின்றார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை பொறுப்பற்ற மோசமான செயல் என்று வர்ணித்துள்ள அவர், மக்களை அமைதி காக்கும்படி வேண்டியுள்ளார். தாம் மக்களை கைவிடமாட்டார் என்றும் அவர் உறுதியளித்திருக்கின்றார்.

குற்றச் செயல்கள், சு.க.ஆதரவாளர்கள் மீதான தாக்குதல்கள் ஆகியவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராகவும் -

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி கையேற்ற விடயத்தில் அது தொடர்பான தமது வர்த்தமானி அறிவித்தலை அச்சிட மறுத்ததன் மூலம் கடமையைச் சரிவர ஆற்றவில்லை என்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்காருக்கு எதிராகவும் -

நாட்டின பாதுகாப்பு விடயத்தில் தவறுகள் செய்திருக்கிறார் என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராகவும் -

ஜனாதிபதியும் சுதந்திர கட்சியினரும் பெரும் குற்றச்சாட்டுக்களை கடந்த சில மாதங்களாக சுமத்தி வந்திருப்பது தெரிந்ததே.

இக்குற்றச்சாட்டுக்களின் மீது இந்த அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று அநுரா பண்டாரநாயக்கா, சரத் அமுனுகம, மங்கள சமரவீர ஆகிய சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் ஜனாதிபதியைக் கோரிவந்தனர்.

இக்கோரிக்கைகளுக்கு மத்தியில் ஆட்சி மாற்றத்துக்கு - ஜனாதிபதி திட்டமிட்டு வருகிறார் என்ற செய்திகளும் வெளியாகியிருந்தன.

எவ்வாறாயினும், பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி கையேற்பதற்கு எதிராக மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளும் பல அரசியல் தலைவர்களும் சில தினங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில், ஜனாதிபதி சற்றும் எதிர்பாராத வகையில் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்.

நாடாளுமன்றத்தையும் ஜனாதிபதி இரு வாரங்களுக்கு ஒத்திவைத்திருப்பதால் எதிர்வரும் 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பட்ஜட்டை சமர்ப்பிக்கும் ஐ.தே.க முன்னணி அரசின் திட்டம் தடைப்பட்டுள்ளது.

முன்னைய ஏற்பாடுகளின்படி நாடாளுமன்றம் நாளை கூடவிருந்தது. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணை பிரேரணையை சபாநாயகரிடம் கையளிப்பதும் -

பாதுகாப்பு அமைச்சரின் நடவடிககைகள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் கருத்தை கோரியதன் மூலம் நாடாளுமன்றத்தின் உரிமைகளை மீறி அதை அவமதிக்கும் வகையில் ஜனாதிபதி நடந்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கும் சிறப்புரிமை மீறல் பிரேரணை ஒன்றை சபை முதல்வர் மூலம் சமர்ப்பிப்பதும் -

ஆளும் கட்சியின் இன்றைய நாடாளுமன்ற நடவடிக்கைத் திட்ட ஏற்பாடாக முன்னர் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.


வடமராட்சி, யாழ். - கொழும்பு பயணிகள் வான் சேவை

நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவு செய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=

ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி. தொ.இ. 021-226-3300

JEYA COMMUNICATION, COLOMBO-13
Tel:01-2478444, 01-2478443, 0777-271478

லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்.


# சம்பந்தனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று காலை 9.30 மணிக்கு கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் கூடுகின்றனர்.

வெளி மாவட்டத்தில் தங்கியுள்ள கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வசதியாக உடன் கொழும்பு திரும்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# நீதிச் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் கருத்துத் தெரிவிக்கையில்:-

ஜனாதிபதி தனது பாதுகாப்பு அதிகாரங்கள் குறித்து உயர் நீதிமன்றத்திடம் சட்ட விளக்கம் கேட்டிருக்கும் வேளையில், பிரதம நீதியரசருக்கெதிராக அரசு குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளமை நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடுவதற்கு ஒப்பாகும் என்று கூறியுள்ளது.

நீதிச் சேவைச் சங்கத்தில் இணைந்திருக்கும் பதிவாளர் சங்கம், லிகிதர் சங்கம், தட்டச்சாளர் சங்கம், சுருக்கெழுத்தாளர் சங்கம் ஆகியனவும் லீவில் செல்ல முடிவெடுத்துள்ளன.

# குற்ற விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் சமுகமளித்திருந்தார்.

கடந்த காலங்களில் நீதி, நிர்வாக விடயங்களில் இடம்பெற்று வரும் பாரபட்சங்களுக்குப் பிரதம நீதியரசரே பொறுப்பு என்று அந்தப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது. பிரேரணை குறித்து அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகையில்:-

ஆளும்கட்சி உட்பட எதிர்க்கட்சிகளின் எம்.பிக்களும் இந்தப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர். ஆகவே, பிரேரணையை நிறைவேற்றுவதற்குத் தேவையான எம்.பிக்களை விடக் கூடுதலான கையொப்பங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இதனை சபாநாயகர் உறுதி செய்வார்- என்றார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 78 (அ) 1 இற்கு இணங்க சபாநாயகரிடம் இந்தப் பிரேரணை கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# புலிகளுடன் பேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தை முழு அளவில் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்திக்கொண்டு - நான் பொறுப்பேற்றுள்ளேன்.

இது ஒரு கட்சிக்கோ அல்லது தனி ஆளுக்கோ எதிரான நடவடிக்கை அல்ல. முழு தேசிய நலனைக் கருத்தில் கொண்டு அரசமைப்பின் கீழ் எனக்களிக்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை இது.

நாட்டை பல வருடங்களாக மோசமடைய வைத்திருக்கும் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதில் நீண்டகாலமாக நான் உறுதியாக இருந்து வருகிறேன்.

நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரே எனது இந்த நிலைப்பாட்டை நான் தெளிவுபடுத்தியிருந்தேன். நாட்டின் சகல இன மக்களின் அபிலாஷைகளையும் திருப்திப்படுத்தும் விதத்தில் பேச்சு மூலம் தீர்வுகாணும் எனது முயற்சிகளைத் தொடரவே நான் விரும்புகின்றேன்.

எல்லாப் பிரஜைகளினதும் மனித உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்ற, எல்லாப் பிரஜைகளிலும் நியாயமான உரிமைகள் பேணப்படுகின்ற, பல்லின மற்றும் ஜனநாயக சமூகம் முழு நாட்டிலும் பேணப்படவேண்டும் என்பதில் நான் உறுதியாகவே உள்ளேன்.

நமது அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் தீர்வு ஒன்றின் ரகம தொடர்பாக நானே நேரடியாகச் சமர்ப்பித்த 2000 ஆம் ஆண்டின் நகல் அரசமைப்பு நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியினரால் கிழித்துத் தீயிடப்பட்டது.

இந்த நாட்டின் சிறுபான்மையினருக்கு - குறிப்பாக தமிழ், முஸ்லிம் சமூகத்தவர்களுக்கு - அவர்களின் விடயம் தொடர்பாகப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு உரிய - தீவிர - கவனம் செலுத்தப்படும் என உறுதியளிக்க விரும்புகின்றேன்.

நாட்டின் தேசியப்பிரச்சினைக்கு இலங்கையின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகிய கட்டமைப்புக்கு அமைவாக நீதியானதும் சமநிலையானதுமான தீர்வைக் காண்பது குறித்து புலிகள் இயக்கத்துடன் பேச நான் தயாராகவே இருக்கின்றேன்.

பிரச்சினையைத் தீர்ப்பதில் தொடர்புடைய சகலரினதும் நல்லெண்ணமும் உறுதிப்பாடும் இயன்றளவு விசாலமான ஆதரவும் இருக்குமானால் நீதியான, நீடித்து நிற்கக்கூடிய தீர்வைக காணலாம் என நான் நம்புகிறேன்.

அமைதி பேணும்படி அனைத்து மக்களையும் கோருகிறேன்.

பழிவாங்கலும், சட்டவிரோதப் போக்கும் எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும் அதனை நான் பொறுத்துக் கொள்ளமாட்டேன். சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவது அரசமைப்பின் கீழ் என்மீது பொறுப்பிக்கப்பட்ட மிகப்பெரிய கடமையாகும். பாதுகாப்புப் படையினரதும் அனைத்து மக்களினதும் ஒத்துழைப்போடு அந்தக் கடமையை நிறைவேற்றுவேன் - என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

# கொழும்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களை ஜனாதிபதி நீக்கியுள்ளதை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படவிருக்கிறது. இதனால் பொரளையிலுள்ள அரசாங்க அச்சகத்துக்கு முன்னால் பெருந்தொகையான பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் பொரளை பகுதியில் நேற்று மாலை வாகன நெரிசல் காணப்பட்டது.

# கொழும்பு நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் - அரசின் மீது நம்பிக்கைப் பிரேரணையைக் கொண்டு வருவது என்றும் - தீர்மானிக்கப்பட்டது. இதனையடுத்து அமைச்சர் கரு ஜயசூரியவுடன் தொடர்புகொண்ட பிரதமர், கொழும்பு நிலைவரத்தை அவதானித்துக் கொண்டிருக்குமாறும் -

அங்கு என்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது குறித்துத் தனக்கு உடனுக்குடன் தெரிவிக்குமாறும் பணித்தார்.

தான் திட்டமிட்டபடி அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.




காரைநகரில் உதயமாகின்றது
COMPUTER TRAINING CENTRE

காரைவாழ் சிறுவர்கள், மாணவர்கள், தொழில் புரிவோரின் கணனிக் கல்வியினை முன்னேற்றும் முகமாக இன்றுமுதல் தனது சேவையினை சக்கலாவோடை, காரைநகரில் ஆரம்பிக்கின்றது.

இடம் : சக்கலாவோடை, காரைநகர்.
காலம் : இன்று (5.11.2003) புதன்கிழமை பி.ப. 4.00 மணி

ஆரம்ப விழாவினை யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதிக் கம்பனியின் யாழ். பிராந்திய முகாமையாளர் திரு.சி.ந.மதிவதனன் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைப்பார்.

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

(C/31039)(35-18-13-30) - நிர்வாகத்தினர்.




A/L தமிழ் 2005
பிரத்தியேகம் - பிரிவு II
நாக.தமிழிந்திரன்
வியா.,வெள். 4-5
Note: இலகுமுறையில் முழுஅலகும் பூர்த்தியாக்கப்படும்.
BEACON-யாழ்.
(24411) (26)




CHEMISTRY
DIAS இன் அனைத்து GROUP CLASSES உம்
104/4, Cross Rd,
Athiyady, JAFFNA.
இல் நடைபெறும்.
*ஆண்டு ரீதியான மீட்டல்
*கைத்தொழில் இரசாயனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
(24421) (32)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.